1413

5 - MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 | 1918-௵ மாச்சு, ஏப்பிரல்௴ பிங்கள௵ பங்குனி௴ காளயுக்தி௵ சித்திரை௴ | பகுதி 11 12

பத்திராதிபர் பக்கம்.

இதற்குமுன் வெளிப்போந்த 9-வது பகுதியில் இப்பக்கத்தில் பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினரில் யார் யார் பூரணசந்திரோதயத்தைப்பெற உரிமையுள்ளவர்என்று எமக்கு எழுதும்படி கூறியிருந்தோம். 174 சுற்றுக்கடிதங்கள் எழுதியும், 21 காரியதரிசிகளே பதில் எழுதினார்கள். மற்றவர்களையும் உடனே பதில் எழுதும்படி கோருகிறோம். இதுவரைவந்த மறுமொழிப்பிரகாரம் யார் யாருக்கு பத்திரிகைபெற உரிமையுளதோ அவர்களுக்கு முன் பாக்கியாயுள்ள பிரதிகளை அனுப்புவதோடு இனியும் அனுப்புகிறோம். காசியிலிருந்து இன்னும் பூர்ணசந்திரோதயம் பெறவேண்டியவர்களுடைய ஜாப்தா வரவில்லை.

சென்றமாதத்தில் நமது பூரணசந்திரோதயம் வெளிவரவில்லை. அச்சாபீசில் சில அசௌகரியத்தாலும், காகிதமின்மையாலும், சென்றமாத சஞ்சிகையை அனுப்பக்கூடவில்லை. இ[illegible]திருக்கும் காகிதத்தின் விலை இரட்டித்திருப்பதை [illegible] கொடுத்தும் காகிதம் கிடைத்தல் அரிதாயி[illegible]ந்தேசித்து இம்மாதத்தில் வழக்கம்போல்

5 பாரங்கள்மட்டும் பிரசுரிக்கிறோம். இதை நேயர்கள் மன்னிப்பார்களாக. கூடுமானவரை முன்னர் அதாவது காகிதவிலை குறைந்திருந்தபோது எத்தனை பக்கங்கள் வந்தனவோ அத்தனை பக்கங்களே இனியும் அனுப்பிவரவேண்டுமென்ற ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம்.

தற்கால நிலைமை.

பம்பாய் இராஜதானியில் ஆமதபாத்தில் அநேகம் நெசவுசாலைக ளிருக்கின்றன. அவைகளில் ஆயிரக்கணக்கான கூலியாட்கள் வேலைசெய்து வருகிறார்கள். சென்ற ஆகஸ்டு மாதம் முதற்கொண்டு அவ்வூரில் பிளேக் உலாவி வந்ததால் அக்காலத்தும் விடாமல் வேலைசெய்து வருவதற்குத்தூண்டுகோலாயிருக்கும் வண்ணம் கூலியாட்களுடைய சம்பளத்தில் 100க்கு 70மடங்கு அதிகமாகச்சம்பளம் கொடுப்பதாய் ஏற்பாடுசெய்து அவ்வண்ணமே நெசவுசாலைக்காரர்கள் கொடுத்து வந்தார்கள். ஆனால் பிளேக் குறைந்த உடன் அதிகமாகக் கொடுத்துவந்ததை நிறுத்தி முன்னர்ப்போல சம்பளத்தைமட்டும் கொடுக்க சாலைக்காரர்கள் பிரயத்தனம் செய்தார்கள். 100க்கு 20க்குமேல் சம்பளத்தை உயர்த்தமாட்டோம் என்று முதலாளிகள் சொன்னார்கள். இதனால் கூலியாட்களுக்குள் மனவருத்தம் அதிகரித்தது. எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்க ஒரு பஞ்சாயத்தை நியமித்தார்கள். அதாவது ஆமதபாத்து கலக்டர் அக்கிராஸனராக, இருப்பதோடு, கூலியாட்கள் ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம்சந்த காந்தியுடன்கூட மற்ற இருவர்களை நியமித்தார்கள், அம்மாதிரியே நெசவுசாலைக்காரர்கள் மூவரை நியமித்தார்கள். பஞ்சாயத்து நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் சில கூலியாட்கள் காரணத்துடனேயோ அஃதில்லாமலோ, வேலை நிறுத்தம் செய்தார்கள். இதனால் கோபம்கொண்டு நெசவுசாலைக்காரர்கள் பஞ்சாயத்திலிருந்து விலகிக்கொண்டார்கள். அது தவிர தாங்கள் கூறியபடி 100க்கு 20 மட்டும் உயர்த்தப்பட்ட சம்பளத்தை வாங்கிக்கொண்டு வேலைக்கு வந்தால்

ஒழிய கூலிகளை வேலைக்கு வரவிடுகிறதில்லையென்று தீர்மானங் கொண்டார்கள். இதன் அருத்தம் என்னவென்றால், வேலைக்காரர்கள் பசியால் வருந்தி, வேறு வழியில்லாமல் தங்கள் வார்த்தைக்கிணங்குவதைவிட கதியற்று தங்கள் காலில் விழுவார்கள் என்று எண்ணினார்கள். அப்புறம் இவ்விதம் நடைபெறும்படி விட்டால் கேடுமிகும் என்று எண்ணி ஸ்ரீமான் காந்தியும், கூலிகள் நியமித்த பஞ்சாயத்தார்களும், விசாரணைசெய்து எவ்வளவு மட்டும் சம்பளத்தை உயர்த்துவது நியாயம் என்பதை தீர்மானிக்க முயன்றார்கள். ஆனால் நெசவுசாலைக்காரர்கள் யாதொருவித உதவியும் செய்யமாட்டோம் என்றார்கள். கடைசியில் விசாரணையின்பேரில் 100க்கு 35 மட்டும் உயர்த்துவது சரியென்று இம்மூவரும் தீர்மானித்து கூலியாட்கள் எல்லோரையும் தருவித்து மேற்கூறியபடி மட்டும் சம்பளம் உயர்த்துவது போதும் என்று ஒத்துக்கொள்ளுகிறீர்களா என்று காந்தியடிகள் கேட்க அவர்கள் முதற்கண் 100க்கு 50 ஆவது உயர்த்த வேண்டுமென்று மன்றாடி பின்னர் 35க்கே ஒத்துக் கொண்டார்கள். அப்பால் ஊருக்குவெளியே ஒரு மரத்தடியில் கூட்டம் கூட்டமாக கூலிகள்கூடி 100க்கு 35 சம்பளம் உயர்த்தினால் ஒழிய நாங்கள் வேலைக்குப் போகிறதில்லையென்று கடவுளின் ஆணைப்படி சபதம் செய்தார்கள். இங்ஙனம் சில நாள் நடந்தது.

*
* *

ஒற்றுமையாய்ச்சேர்ந்த நெசவுசாலைக்காரர்கள் சும்மாவிருக்கவில்லை. சுவாமியாவது பூதமாவது என்றும் சபதம் மீறினால் பாபம் இல்லையென்றும், வேலைக்குவந்தால் சந்தோஷமாக முதலாளிகள் கொடுக்கும் சம்பள அதிகரிப்பை மட்டும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தூது ஆட்கள் மூலமாய் கூலிகள்மனதைக்கலைக்க ஆரம்பித்தார்கள். அநேகமாக அநேகர் கலைந்தும் விட்டார்கள். ஆயிரக்கணக்காக வந்து சபதம் செய்த கூட்டங்கள் கலைந்து சின்னஞ்சிலரே மரத்தடியில் வந்து தளர்ந்த மனத்தராக 20 மட்டும் உயர்த்தும் சம்பளத்தை ஏற்றுக்கொள்ளப் போகிறோம்

என்று காந்தியடிகளிடம் கூற, அவர் மிகவும் வருத்த முற்றார். கடவுளது ஆணையின்பேரில் கூறிய சபதம் அசத்திய மாகலாமா? பதினாயிரக்கணக்கான ஜனங்கள் பொய்யர்களாகலாமா? இது நீதியல்லவே, என்று தீர்க்கமாய் கடவுளின் பேரில் பாரத்தைப்போட்டு ஆலோசித்தார். ஆலோசித்து "கூலிகளுக்கு 100க்கு 35 வீதம் சம்பளம் உயர்த்தும் வரையில் நான் யாதொரு ஆகாரமும் உட்கொள்ளுகிறதில்லை" என்று சத்தியம் செய்தார். இதைக் கேட்டவுடன் கூடியிருந்தஜனங்கள் தைரியமுடையவர்களாகி, இவ்வளவு உத்தமகுணமுடைய மனிதன் இக்காலத்திலும் இருக்கிறானு என்று ஆச்சரியமடைந்து முன்னர்க்கூறிய விரதத்தை மறுபடியும் கைக்கொண்டார்கள். ஏங்கித்தயங்கி வீட்டிலிருந்த மற்றையோரும் தைரியம் கொண்டார்கள். அவர்கள் கண்களினின்று கண்ணீர் தாரை தாரையாய் வழிந்தது. தங்களைக் காப்பாற்றும் பொருட்டு இக்கொடூரமான சபதத்தை இவ்வுத்தமர் செய்தாரே யென்று அவர்களுடைய நன்றியறிவுக்கு அளவில்லை. மற்றவர்கள் ஒரு அவசரத்தில் முன் பின் யோசனையின்றி வார்த்தை சொல்லி அப்பால் அவ்வளவு அவசரத்தில் அதை மறப்பது போல் இருப்பவரா? காந்தியடிகள், யாதுவரினும், கொண்ட விரதத்தைக் கைவிடாதவரல்லவா? ஆகையால் இம்மகான் செய்த தீவிரமான சபதத்தின் பெருமையை சிந்திக்கச்சிந்திக்க, மனம் நடுங்குகிறது.

***

சின்னாட்கள காந்தியடிகள் இவ் விருதத்தை யனுஷ்டித்த பின்னர், நெசவுசாலைக்காரர்கள அடிகள வார்த்தைக் கிணங்கினார்கள் என்று பத்திரிகைகளில் படிக்கிறோம்.

***

மேற்கூறிய விஷயமானது கனவா அல்லது நினைவா? கதையா அல்லது சரித்திர உண்மையா? இது நடைபெற்றதானால் நடைபெற்றகாலம் கலிகாலமா அல்லது முந்தின யுகங்களா? என்று படிப்போருக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களுக்கு, உடனே ஸ்ரீராமர் சமுத்திர ராஜனை வருவிப்

பதற்காக பிராயோபவேசம் செய்து, தர்ப்பாஸனத்தில் சயனித்தது ஞாபகத்துக்கு வருகின்றது.

* * *

மேனாடுகளில் முதலாளிகளுக்கும், கூலியாட்களுக்கும் அடிக்கடி கூலி முதலிய விஷயங்களில் முரண் ஏற்பட்டு, வேலை நிறுத்தம் ஏற்படுவது வழக்கம். ஒன்றாவது இவ்வண்ணம் முற்றுப்பெற்றது கிடையாது. இதன் தத்துவம் என்ன? காந்தியடிகள் மாசற்ற தூயபுருஷர், சுயலாபத்தைக் கனவிலும் கருதிலர். கிருபைக்கடல். மன்னுயிரைத் தன்னுயிராகப் பேணுபவர். பிறரை வருத்த எவ்வாற்றானும் உடன்படாதவர். சத்தியத்தை உறுதியாய்க் கடைப்பிடித்தவர். கடவுள் இருக்கிறார் என்று வாக்கினால் மாத்திரம் உரைப்பவரல்லர். அவ்வுண்மையாய் உண்மையாய் அறிந்தவர். மன உறுதியில் ஹிமய மலையைப்போன்றவர். எது சரியென்று கொண்டனரோ அதை எவ்வாற்றானும் முடித்தே தீருபவர். இத்தகையவர் கொண்ட நோன்பு முடியாமல் எவ்வாறு இருக்கும்? தான் உலகத்தாரால் போற்றப்பெற்றவர் என்ற மமதைகொண்டு நெசவு சாலைக்காரர்கள் எப்படியாவது பயந்து இணங்குவார்கள் என்று யோசித்துக் கொண்ட விரதமோ இது? அல்ல. முற்காலத்தில் இந்தியாவில் ரிஷிகள் உலக க்ஷேமத்தின் பொருட்டுக் கருதும் கருமத்தை முடிப்பதற்காக செய்யும் தபசு இதுதான். இவ் விஷயத்தில் அஹங்கார, மமகாரத்திற்கு இடமில்லை. உலகத்துக்கு ஹிதம் செய்யும்பொருட்டு, சுயலாபம் கருதாமல், தன்னை வருத்தி, தீவிரமான தபசு செய்தால் அவ்வுத்தமனை ஒரு கால்வாயாகக்கொண்டு கடவுளுடைய கிருபையானது உலகத்தில் பொழியும் என்பது முக்காலத்திலும் பொய்யாத உண்மை. இவ்விதமான தபசினால் மூவுலகும் தகிக்கப்பட்டு தேவதைகள் கேட்டவரத்தைக் கொடுக்க முன் வருகிறார்கள் என்று புராணங்களில் நாம் படித்ததில்லையா? இவையெல்லாம் பொய்யென்று நினைத்தோம். ஆனால் ஸ்ரீமான் காந்தியடிகள் அவை மெய்யென்று ருசுப்படுத்துகிறார். உண்மையென்பது எக்காலத்துமல்லவோ உண்மையாயிருக்கும்.

இவ்விஷயத்தைப்பற்றி மேனாட்டாரால் பிரசுரிக்கப்பட்ட சில பத்திரிகைகள் பரிகாசமாய்ப் பேசுகின்றன. மமதையிலும், அறிவீனத்திலும், தேஹாத்ம புத்தியிலும் மூழ்கிக் கிடக்குமவைகள் இவ்வுத்தம விஷயங்களை எவ்வாறு அறியமுடியும். எப்படியிருந்தாலும், மேனாட்டில் வேலை நிறுத்தத்தை இம முறையில் நிறுத்த பாராவது ஒருவர் முன் வந்திருந்தால், அவர்கள் இது சாத்தியம என்று மனதாலாவது ஊகிக்கமுடியும். அப்படியில்லாததால் தான் இப்பத்திரிகைகள் தம் அறிவீனத்தைக் காட்டுகின்றன.

*
* *

இவ்விதத்திலும். இதைப்போன்ற மற்றவிதத்திலும் இந்தியாவின் சுயமான தன்மையானது வெளிக்கிளம்ப வேண்டியதவசியம். ஒவ்வொருவரும நாமே யாதல் வேண்டும். மற்றவரைப்போலாக வேண்டிய பிரயத்தினங்கள் இது காறும் சென்ற 100 வருஷஙகளாகச் செய்துவந்தோம். இனி மேலாவது நாமேயாக முயல்வோம். இதற்காகத்தான தேசக்கல்வி பரவுதல் அவசியம என்று முறையிடுகிறோம் ஆகையால்தான் இப புண்யபூமி முழுவதும் தற்போது அக் கல்வி பரவுதற்காக செய்துவரும் பெரு முயற்சியால் மனம் பூரிக்கிறோம்.

*
* *

கடவுளது கிருபையால், இம் முயற்சியில் சிறியவர். பெரியவர் யாவரும் ஊக்கமுள்ளவர்களா யிருக்கிறார்கள், நாடகம்போட்டு ஜீவனம் செய்பவா விசேஷமான உதாரசிந்தை யற்றவர்கள் என்று சிலர் சொல்வதுண்டு. அவ்வசைச் சொல்லை அன்னவர் இப்பொழுது பொய்யாக்கி விட்டனர். தேசியக்கல்விக்காக இலவசமாக நாடகங்கள் நடத்தித் தருகிறார்கள். ஆங்காங்கு உண்டியல்களில் பணம கொடுக்கவோ அல்லது அரிசி கொடுத்து தவவோ, ஜனங்கள் ஆவலாக முன் வருகிறார்கள். சேகரிபபவர் சரியானபடி வாங்கிப்போகவில்லையே எனறு ஆண், பெண், யாவரும் வருந்துகிறார்கள். கேட்பவன் கேட்கவேண்டிய வழியில் கேட்டால் கொடுப்ப

வர்கள் எங்குமுண்டு என்பதே இக்காலத்தில் சுதேசீய சர்வ கலாசாலை ரிஜிஸ்டிரார் ஸ்ரீமான் ஜார்ஜ் அருண்டேல் நன்றாய் ருசுப்படுத்திவிட்டார்.

*
* *

ஒவ்வொருவருக்கும் இரண்டு சுபாவமுண்டு. ஒன்று மேலானது ஸமரஸ பாவத்தைக்கொண்டது, மற்றொன்று கீழானது, தன்னயத்தைக்கருதியது. உலக வழக்கில் சாதாரணமாய் ஜனங்கள் பிந்தியதையே வற்புறுத்துகிறார்கள். அம்மாதிரியே தியாகம் கொடு என்று கேட்பதிலும் கேட்கப்படுபவனுடைய நலத்தைக் காட்டியே கொடுக்கும்படி செய்தல் ஒருமுறை. பொது நலத்தைக்காட்டி அதனால் உலகம் அடையும் மேன்மையையும் நலத்தையும் காட்டி அதற்காக கொடுக்கும்படி கேட்டல்மற்றொருமுறை. இவ்விருமுறையில் பிந்தியதே ஆராய்ந்து பார்க்குமிடத்து, கொடுப்பவனுக்கும் வாங்குபவனுக்கும் உண்மையான ஆனந்தத்தைக்கொடுக்கக்கூடியது. இவ்வுண்மையை ஸ்ரீமான் அருண்டேல் தினந்தோறும் பத்திரிகைகள் மூலமாய் விளக்கி வருகிறார். இம்முயற்சியில் உழைத்து வரும் யாவரும் இவ்வுண்மையை நன்குணர்ந்துவருகிறார்கள்.

*
* *

நமது பூர்ண சந்திரோதயத்தில் சென்ற பல சஞ்சிகைகளில் பிரபத்தி வித்யை என்னும் தலைப்பெயர்பூட வியாசத்தை எழுதியவரும், மாஜி சப்ஜட்ஜுமாயிருந்த பிரஹ்ம ஸ்ரீ வி. கே. தேசிகாச்சாரியார் அவர்கள் சிலநாளைக்கு முன் இன்னில உலகைவிட்டு விண்ணுலகு சென்றார் என அறிய மிகவும் இரங்குகிறோம். சுந ஸ்ரீ வி. கே. ராமானுஜாசாரியாரவர்களின் ஸகோதரர் இவர். வெகுகாலமாய் டிஸ்டிரிக்ட்டு முன்சீபாக இருந்து அப்பால் சப்ஜட்ஜு உத்தியோகத்தை வகித்துவந்தார். சென்றவிடமெல்லாம் பிரஹ்மஞான சபையின் ஊக்கத்தை விருத்திசெய்துவந்தார். உபகாரச்சம்பளம் பெற்றுவந்த சென்ற சில வருஷங்களில் பிரஹ்மஞான சபையில் குன்றாத சிரத்தையுடன் ஆங்காங்கு உபந்யாசங்கள் செய்துவந்தார். சிலகாலம் சென்னை ராஜ

தானிக்கு பிரஹ்மக்ஞானசபை மாகாணக் காரியதரிசி உத்யோகத்தை வகித்துவந்தார். இவருடைய சகோதரர் அவர்கட்கும், இவரது குமாரனுக்கும் நம்முடைய அநுதாபத்தைத்தெரிவிக்கிறோம்.

***

“இந்திய தேசாந்திரி” என்ற பெயருடன் ஒரு மாதாந்தரத் தமிழ் பத்திரிகை வெளிவரப்போகிறதென்றும் அதை இந்தியன் எமிகிரெண்டு என்ற ஆங்கிலப்பத்திரிகையை இயற்றுபவரான ஸ்ரீமான் கி. கே. ஸ்வாமிநாதன் என்பவர் நடத்தப்போகிறார் என்றும், காளயுக்தி வருஷம் பிறப்புதினத்தில் அதுவும் பிறக்கும் என்றும் அறிய மிகவும் ஆனந்திக்கிறோம். தேசாந்தரங்களுக்குப்போக விரும்பும் இந்தியர்கள் அத்தேசங்களைப்பற்றிய சகல விபரங்களை அறியவேண்டும். அங்குச் சென்றிருக்கும் நம்முடைய சகோதரர்களுடைய கஷ்ட நஷ்டங்களை நாமும் அறியவேண்டும். அக்கஷ்டநஷ்டங்களை நிவர்த்திக்க நாம் முயலவேண்டுமானால் அந்த ஊரில் நடைபெறும் உண்மை சமாசாரங்களை அறியவேண்டும். இதை உத்தேசித்து இப்பத்திரிகை இன்றியமையாதது என்று கூறுவோம். ஆங்கிலத்தில் நிலவும் பத்திரிகைகளைக்காட்டிலும் தமிழில் தமிழர்களுக்கு அறிவுறுத்தும் பத்திரிகைதான் மிகவும் முக்கியம் என்று எண்ணுகிறோம். ஆகையால் இப்பத்திரிகைக்கு எமது மனமார்ந்த நல்வரவைக்கூறுகிறோம்.

***

மதுரையில் வித்யாபாநு என்ற பத்திரிகையை ஆசிரியராயிருந்து நடத்திவந்தவரும், படிப்பிலும் அறிவிலும் தேர்ந்தவருமான ஸ்ரீமான் மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்கள் சிவலோகப்பிராப்தியடைந்தார் எனக்கேட்டு அவரது குமாரனுக்கும் அவரது சகோதரருக்கும் எமது அநுதாபத்தைத்தெரிவிக்கிறோம்.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

விக்கிரஹாராதனை.

ஓர் சம்பாஷணை.

சுந்தரசாஸ்திரி:—ஓய் இராமாநந்தரே! ஹிந்து மதத்தைச்சேர்ந்தவர்களான நாம் விக்கிரஹங்களை வைத்து பூஜை செய்து வருவதை சில பிற மதஸ்தர்கள் தூஷிக்கிறார்களே. வாஸ்தவத்தில் பூஜையில் விக்கிரஹங்களை உபயோகப்படுத்துவது பிசகா? சொல்லும்.

இராமாநந்தர்:—மனதானது குரங்குபோல் சஞ்சலப்பட்டு நிலையற்றுத்திரியும் ஸ்வபாவமுள்ளது. அதை அப்படிச்செய்ய வொட்டாமல் நிறுத்துவதற்கு விக்கிரஹம் உதவுகிறது.

சு:—அது எவ்விதத்தில் உதவுகிறதென்பதைப் பற்றிச் சற்று விபரமாய்ச் சொல்லும்.

இரா:—நாம் கண்ணால் பார்க்கும் ரூபமானது மனதில் புகைப்படங்கள் எடுக்கப்படுவதுபோல் பதிகிறது.

சு:—பதிகிறதென்றால் என்ன?

இரா:—வெளியில் பார்க்கப்படும் ரூபம்போல் மனதிலும் அந்த ரூபமே தங்குகிறது.

சு:—அதனால் அலையும் மனதை எப்படி அடக்குகிறது?

இரா:—ஒருவன் தன் நேத்திரத்தை மூடிக்கொண்டு மனதில் பதியப்பட்டிருக்கும் ரூபத்தையே தனிமையான ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்திப்பதில் அப்பிம்பம் சரிவரக் காணப்படாவிட்டால் மறுபடியும் அவ் விக்கிரஹத்தை நன்றாய் மனதில் பதியும்படி செய்துகொள்ள வேண்டும். மனது சஞ்சலப்பட்டு அந்த ரூபத்தைவிட்டு விலகுங்காலத்தில் அவ்வாறு விலகுவதினின்று இழுத்து ரூபத்தில் நிறுத்தவேண்டும். இப்படி அனுதினமும் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய சௌகரியத்திற்கேற்ப சில நிமிஷங்கள் செய்து வருவாராகில் நாளடைவில் மனதை சஞ்சலப்பட வொட்டாமல் ஸ்திரமாக நிற்கச்செய்து விடலாம். இதற்கு அப்பியாசமும் வைராக்கியமும் தான் தேவை.

சு:—வைராக்கியம் என்றால் என்ன?

இரா:—வைராக்கியம் என்பது விராகம். அதாவது சுகம், துக்கம், இவைகளில் பற்று அறுத்தல். ஆகையால் எடுத்த காரியத்தை முடிக்க ஊக்கத்துடன் பிரயத்தனப் பட்டு வருவதின் மத்தியில் தோன்றும், சுகதுக்கங்களால் வரும் விக்கினங்களைக் கவனியாமல் முடிவுபெறச் செய்வது தான்.

சு:—கடவுளை வழிபடுவதில் உலோகங்களால் செய்யப் பட்ட விக்கிரஹங்களை உபயோகிக்கலாமா?

இரா:—பரம்பொருளான கடவுள் ஸர்வவியாபகர் என்றும், அவர் இல்லாத இடமே கிடையாதென்றும் நீர், கேள்விப்பட்டதில்லையா?

சு:—முற்காலத்தில் ஹிரண்யகசிபு என்ற ஓர் இராக்ஷஸனுக்கும் அவன் குமாரனான ஈசுவர பக்தியுள்ள பிரஹ்லாதனுக்கும் ஈசுவரன் விஷயமாய் நடந்த சம்பாஷணையில் ஈசுவரன் தூணிலும் துரும்பிலும், இவைபோன்ற எல்லா வஸ்துக்களிலும் இருக்கிறார் என்று பிரஹ்லாதன் சொல்ல, அப்படியா வென்று ஹிரண்யகசிபு மிகச் சினத்துடன் தூணைக் காலாலுதைக்க உடனே ஈசுவரன் நரசிம்ம மூர்த்தியாகத் தூணினின்று வெளியே வந்ததாகக் கேட்டிருக்கிறேன்.

இரா:—தற்காலத்தில் இருக்கும் வங்காள தேசத்தவரான ஸ்ரீமான் ஜெ. ஸி. போஸ் (வஸு) என்பவரின் கீர்த்தியைப்பற்றி நீர் கேட்டதில்லையா?

சு:—ஈசுவரன் விஷயமாக நாம் பேசிக்கொண்டிருக்கையில் ஸ்ரீமான் ஜெ. ஸி. போஸ் அவர்களின் கீர்த்தியைக் குறித்துப் பேசுகிறீரே அது என்ன?

இரா:—உணர்ச்சி இல்லாததுபோல் தோன்றும் கல் முதலியவைக்கும் விசனம் ஸந்தோஷம் முதலியவைகளைக் காட்டும் சக்தி யிருப்பதாகவும் கல் முதலிய தாதுவர்க்கத்திலும் புல் பூண்டு முதலிய ஸ்தாவரத்திலும், எறும்பு, ஆடு, மாடு முதலிய ஜீவராசியிலும் மனித வர்க்கத்திலுமுள்ள

உயிர் பாவமானது அதாவது ஜீவாத்ம பாவமானது ஒரே தன்மையை யுடையதென்றும் ஒரு நுட்பமான கருவியினுல் ஸ்ரீமான் ஜெ. ஸி. போஸ் காட்டிவருவதை அநேகர் பிரத்யக்ஷமாய்ப் பார்த்திருக்கிருர்கள். இதனுல் சரீரங்கள் பல பேதங்களுள்ளவையாக இருந்தாலும் உள்ளிருக்கும் ஆத்மாவானது ஒரே தன்மையை உடையதென்று காட்டுகிறதல்லவா? இப்படி யிருப்பதால்தான் ஈசுவரன் ஆகாசம்போல் ஸர்வ வியாபகர் என்றும் அவரில்லாத இடமே கிடையாதென்றும் ஜனங்கள் சொல்லி வருவதைக் கேட்கிறோம். இதை வைத்தே தான் "அவன் அன்றி ஓர் அணுவும் அசையா" தென்று செல்லுகிருர்கள்.

சிவஞானதீபத்தில்

"அவ்வுயிர்போல் எவ்வுயிர்க்கும் அறிவாகி நிறைந்தே
ஆனந்த சுகாதீதத் தப்புறத்து அப்புறமாய்
இவ்வுருவம் இதுநிலையம் இதுஎன்னும் கட்டிலதாய்
ஏகமாய் ஆதி நடு ஈறு அகன்றமுதலாய்
எவ்வெவர் எப்படி நினைந்தார் அவ்வவர்க்கு அப்பொருளாய்
எண்ணும் மனபாவகத்தான் நிண்ணரிய ஒளியாய்
ஒவ்விய சித்துடன் அசித்துமட் அல்லதுவாய் உற்ற
உரு அரு உபயம் அகன்று உளதாகும் பதியே இறைஞ்சுவாம்."

என்றும், திருமந்திரத்தில்

"மண் ஒன்றுதான் பல நற்கல மாயிருக்கும்
உண்ணின்ற யோனிகளெல்லாம் ஒருவனே"

என்று பாடியிருப்பதை கேட்டதில்லையா?

கு:—நீர் சொல்லுவதைப் பார்த்தால் உலோகங்களால் செய்யப்பட்ட விக்ரஹங்களுக்குள்ளும் ஈசுவரன் இருக்கிருரென்றும், அப்படிக்கிருக்கும் ஈசுவரனையே பக்தர்கள் பஜிக்கிருர்களென்றும் தெரிந்தேன். கண்ணப்ப நாயனுர் சரித்திரம் இப்பொழுதுதான் என் ஞாபகத்திற்கு வருகிறது. கல்லால் செய்யப்பட்டிருக்கும் லிங்கத்துக்கும் கண் முதலிய இந்திரியங்க ளிருப்பதாகப் பாவித்து அதை பூஜித்த வேடனுகிய கண்ணப்ப நாயனுர் உண்மையில் அந்த

லிங்கத்தின் கண்ணினின்று இரத்தம் வந்ததைப் பார்த்து அதற்குச் சிகிச்சைசெய்து, தன் பக்தியைக்காட்டின விஷயம் யாவரும் அறிந்ததே. விக்கிரஹங்களைச் செய்தவுடன் அவைகளை எவ்விதம் பூஜைக்கு அருகமாக்குகிறார்கள்?

இரா:—அவைகளுக்கு மந்திரமூலமாய்ப் பிராணப்பிரதிஷ்டை செய்கிறார்கள். அந்தந்த விக்கிரஹங்களின் தன்மைக்கேற்ப மந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மந்திரங்களை அவைகளுக்கு ஏற்பட்ட ஸ்வரத்துடன் உச்சரிப்பதால் ஒரு விசமான சக்தி ஏற்படுகிறது. அவ்வித சக்தி குறையுங்காலத்தில் மறுபடியும் மந்திர பூர்வமாய்ச் சக்தியை உண்டாக்குகிறது வழக்கம். ஆலயங்களில் அப்போதைக்கப்போது அஷ்டபந்தனம் கும்பாபிஷேகம் நடப்பதை பார்க்கிறோமல்லவா? சக்தியை உண்டாக்குவதற்காகத்தான் இந்த அபிஷேகம். மேலும் ஆலயங்களில் பிரதிஷ்டையாயிருக்கும் பிம்பங்களுக்கு அடியில் அந்தந்த பிம்பங்களுக்கேற்ப மேல்கண்டபடி சக்தியேற்பட்ட யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். விக்கிரஹங்களை நோக்கி மந்திரார்ச்சனைகள் செய்யச்செய்ய விக்ரஹத்தின் சக்தி விர்த்தியாகும். ஆனால் அர்ச்சகரின் மனோபாவத்துக்குத் தக்கபடிதான் சக்தி ஏற்படும். பக்தியன்றி மனசை வேறு இடத்தில் செல்லும்படி விட்டுவிட்டு வாயால் மட்டும் மந்திரத்தை உச்சரிப்பதினால் பிரயோஜனமில்லை. பஞ்சபாண்டவர்களில் பீமன் அந்தரங்க பக்தியுடன் மானசீகமாயும் அவன் தம்பி அர்ச்சுனன் அவ்வித பக்தியின்றி டம்பார்த்தமாக வெளிப்படையான புஷ்பங்களுடனும் மகாதேவமூர்த்தியைப் பூஜித்து வந்ததைப் பார்த்த ஸ்ரீபகவான் கிருஷ்ணன், அர்ச்சுனன் செய்துவரும் பூஜை பிரயோஜனமற்றதென்று அவனை சூக்ஷ்ம உலகமான கைலாசத்துக்குக் கூட்டிப்போய்க் காட்டியதாக மகா பாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதைப்பற்றி நீர் கேள்விப்பட்டதில்லையா? ஒருவன் தான் விசுவசிக்கும் மூர்த்தியை அந்தரங்க பக்தியுடன் பூஜிப்பானாகில் அம்மூர்த்தியின் அன்பான கிரணங்கள் பல பிரிவுகளாக இவனை வந்து அடையும்.

நாம் கடவுளை வணங்க ஆரம்பம் செய்யும்போதெல்லாம் நம்மால் அவரிடம் செலுத்தப்படும் நமது தீவிரமான மனோவிருத்தியானது புஷ்பவடிவமாகி நாம் தியானிக்கும் கடவுள் மூர்த்தியின் பாதங்களைச் சேர்கின்றன. இதுதான் மானசிக பூஜையில் செய்யப்படும் அர்ச்சனை. இவ்விதமே பீமன் மானசீகமாய் மஹாதேவரைப் பூஜை செய்ததில் சூட்சும உலகத்தில் புஷ்பங்களாக வந்து விழுந்ததாக மகா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று கொள்ளலாம்.

நமது எண்ணங்களுக்கு வர்ணமும் ரூபமும் உண்டென்பதைப்பற்றி மாதாஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளும் ஸ்ரீமான் லெட்பீடரும் வெளியிட்டிருக்கும் எண்ணங்களின் ரூபங்கள் என்ற புஸ்தகத்தில் விபரமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

சு:—விக்ரஹங்களின் ரூபத்தை நம்முன்னவர்கள் எவ்விதம் அறிந்தார்கள்.

இரா:—நமதுதேசத்திய பூர்வீக ரிஷிகள் சூட்சும திருஷ்டியால் கண்டறிந்திருக்கிறார்கள். அவ்விஷயங்களை ஸ்தூல உலகத்தில் உள்ள பாமரஜனங்கள் அறிந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு இவ்விஷயங்களை விக்கிரஹங்கள் வடிவமாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு மூர்த்தியைப்பற்றியும் சாதாரண ஜனங்கள் படித்தும் கேட்டும் ஆனந்தப்படும்படியான விதமாய் வேதவியாசர் புராணங்கள் எழுதியிருக்கிறார். அவைகளை மேலெழுந்தவாறாகப் பார்ப்பவர்களுக்குக் கதைகள்போலத் தோன்றும். ஆழ்ந்து பார்ப்பவர்களுக்குத்தான் தத்துவந் தெரியும்.

சு:—நீர்சொல்வதைப்பார்த்தால் விக்கிரஹங்களை நம் முன்னோர்கள் தீர்க்காலோசனையின் பேரில் என்னைப்போலொத்த சாதாரண ஜனங்களின் பிரயோஜனார்த்தம் ஏற்படுத்தியிருக்கிறார்களென்று தெரிகிறதே. எதார்த்தம் இவ்வாறிருக்க வீணாக அல்லவோ சில பதஸ்தர்கள் விக்ரஹ ஆராதனையைப்பற்றித் தூஷிக்கிறார்களென்று தெரிகிறது.

இரா:—அப்படி தூஷிக்கிறவர்கள் வெளிப்படையாக விக்கிரஹங்களை வைத்துப் பூஜிக்காவிட்டாலும் அவர்கள் ஈசுவரனைப்பற்றி ஸ்மரிக்கையில் தாங்கள் ஈசுவரன் விஷயமாய் கேள்விப் பட்டிருக்கும் சக்திகள் குணங்கள், ரூபம், இவைகள் தங்கள் மனதில் ஏற்கனவே பதியப்பட்டிருப்பதில் அவைகள் அவர்கள் ஞாபகத்துக்கு ஈசுவர பஜனை காலத்தில் வரவே செய்கிறது. அதுவும் விக்ரஹ ஆராதனை தான். பரமாத்மா நிர்க்குணர். அவரை மனதால் அறிய முடியாது. அதினால் சகுண பிரஹ்ம உபாசனையே நமக்குச் சிலாக்கியமானது. சகுண பிரஹ்மத்தை விக்ரஹ மூலமாய் உபாசிப்பதில் காளடைவில் நிர்க்குண உபாசனை இலேசாய் வந்துவிடும். இதை நம் முன்னோர்கள் நன்கு அறிந்து துவிஜர்களான அந்தணர்களுக்கு ஏற்படுத்திய சந்தியா வந்தனத்தில் சூரிய உபாசனையை குறிப்பிட்டிருக்கிறார்கள். பரமார்த்தமாகப் பார்க்கையில் சூரியனுக்குள் அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவின் தேஜஸையே உபாசிக்கும்படி செய்திருக்கிறார்கள் என்று தெரியும்.

சு.—நமது தேசமாகிய இந்தியாவில் அரச விருக்ஷத்தினடியில் கணபதி பிம்பம் வைக்கப்பட்டிருக்கிறதே அதைப்பற்றிச் சற்று விபரமாய்ச் சொல்லக்கோருகிறேன்.

இரா:—கணபதி என்றால் கணங்களுக்கு அதிபதி என்று பொருள் படுகிறது. கணம் என்றால், காமம், குரோதம் லோபம், மோகம், மதம், மாற்சரியம், என்ற இந்த அவகுணங்களைக் காட்டுகிறது இவைகளை ஜயித்தவர் ஆனதால் அவருக்குக் கணபதி என்றுப் பெயர் வழங்கி வருகிறது. விநாயகர் என்றால் நாயகர் இல்லாதவர். அதாவது இவருக்கு மேல் எஜமான் ஒருவருமிலர் என்று தாத்பரியம். கஜம் என்றால் சப்தம் என்பது பொருள் சப்த பிரஹ்மம் என்று, கொள்ளலாம். இவரையே ஞான மூர்த்தியென்று சொல்லுவார்கள் இவரையே விக்னேசுவரர்என்று சொல்வதுண்டு. அதாவது சகல விக்கினங்களையும் போக்குபவர் என்று பொருள். எவ்விதசுபகாரியத்தையும் ஆரம்பிக்கும் முன்னர் விக்

விக்னேசுவர மூர்த்தியை ஆராதிப்பது வழக்கம். இவருடைய வாகனம் மூஷிகம் அதாவது மூஞ்சூறு மூஷிகம் என்றால் திருடுதல் அல்லது அபகரித்தல் என்று பொருள். அதாவது இவரை அன்புடன் பக்திசெய்பவர்களின் அக்ஞானத்தைப் போக்கி ஞானத்தைப் புகட்டி மோக்ஷத்தைக் கொடுக்கும் மூர்த்தி இவரே. இவரிடம் தோன்றும் பாசம் முதலிய ஆயுதங்களுக்கும் இவ்விதமே அர்த்தம் செய்துகொள்ளலாம். இவரையே பிரணவ ஸ்ரூபி என்பதுமுண்டு.

க:—சாதாரணமாய் அரச மரத்தடியில் அல்லவோ விக்கினேசுவர விக்கிரஹத்தைக் காண்கிறோம். ஏன் ஆல விருக்ஷத்தின் கீழும் மற்ற மரங்களின் அடியிலும் காணப்பட வில்லை?

இரா:—பகவத் கீதை பதினைந்தாம் அத்தியாயத்தில் அரச விருக்ஷத்தை ஸம்ஸார விருக்ஷமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் சம்சார பந்தத்திலிருந்து அதாவது ஜனன மரணத்திலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைய வேண்டுமென்று விரும்பினால் ஞானத்தைப் பெறவேண்டும். இதை பாமரஜனங்களுக்கு அறிகுறியாகக் காட்டும் பொருட்டு அரச விருக்ஷத்தின் அடியில் ஞான மூர்த்தியாகிய விக்கினேசுவரரை வைக்கப்பட்டிருக்கிறது. கொஞ்சம் விசாரணை செய்யும் ஸ்வபாவமுள்ள சாதாரண மனிதர்கள் கூட இந்த தத்துவத்தை எளிதில் அறிந்துகொள்வதற்காக இவ்விதம் குளக்கரையில் வைக்கப்பட்டிருக்கிறதென்று கொள்ளலாம்.

க:—நான் இதுவரை விக்கிரஹங்களின் எதார்த்த தத்துவத்தைப்பற்றி தெரிந்துகொள்ளாமலிருந்தது எனது துரதிருஷ்டமும் மதியின்மையுமே. விக்ரஹங்களைப் பற்றித் தெளிவாய் எடுத்துரைத்து எனக்கிருந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்த உமக்கு நமஸ்காரம்.

ஓம் தத்ஸத்.

கே. எஸ். இராமசந்திரையர்.

சுதேசக்கல்வி.

(385-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இதனால் இப்பிள்ளைகளும் மற்ற இரு திறப பாடசாலைப் பிள்ளைகளைப்போல் நிரீசுவர வாதையால் மயக்குண்டு, மதப்பற்று நீங்கித்தாம் பிறந்த குலத்தைக் கெடுக்கும் கோடாரிக்காம்புகள் போலாவர். இவ்வாறு முத்திறத்துப் பாடசாலைகளிலும் பிள்ளைகள் தமது பூர்வ கொள்கைகளை விடுத்து, நற்குணங்கள் அமையப்பெறாது தான்தோன்றிகள் போல் பெருமிதத்துடன் திரிந்தால், நாடு எவ்வண்ணம் தழைத்தோங்கும். பிள்ளைகள் கட்டுக்கடங்காது வீணாகக்கெட்டுப்போவதை நோக்கிய நமது நாட்டார்க்கும் நமது துரைத்தனத்தாருள் சிலருக்கும் இத்தகைய படிப்பின் சிறப்பின்மை இப்போதுதான் தெளிவாயிற்று.

இனிப் பிள்ளைகளது தேசாபிமானத்தையும், பாஷாபிமானத்தையும் பற்றி விசாரிப்போமாயின், அவையும் இக்கதை போலவே முடிகின்றன. நாம் முன்னர்க் கூறியபடி இதுவரை பள்ளிக்கூடங்களிலெல்லாம் நமது நாட்டையும் நமது நாகரிகத்தையும் இழிந்தே கூறப்பட்டு வந்தமையின் நம் சிறுர்களுக்கு ஏற்பட்ட ஆங்கில அபிமானத்தால் நம் சுதேச பாஷைகள் தம்பெருமைகுன்றி, பள்ளிகளில் பேச்சு வழக்கற்று, அடுப்பண்டையிலும் ஆதரவற்றுத் தாழ்ந்த நிலையை யடைந்துவிட்டன. இவைகளை இன்னும் விரிப்பிற் பெருகும்.

இங்ஙனம் மனிதர்க்கு இன்றியமையாத தேசாபிமானமும், பாஷாபிமானமும், மதாபிமானமும், நமது இளஞ்சிறுர்க்குத் தக்க பிராயத்திலேயே கற்பியாததனால் நமது கல்வி முறை இப்போது தாழ்வான நிலையை யடைந்துள்ளது. முன்னாளில் அம்மூன்றும் நம் கல்வி முறையில் பொன் போல் போற்றப்பட்டன. அவைகளை மறுபடியும் கற்பிப்பதைப் போல் இலேசானது ஒன்றுமில்லை. நமக்கு இயற்கையிலேயே. இவை உடன் பிறந்தவை போல் அமைந்துள்ளன. தணலை மூடிய சாம்பலைப்போல நம்மை மறைக்கும்

சில மயக்கங்களைப் போக்கடித்தால் இவை நம்மிடம் கொழு
ந்துவிட்டெறியும் அக்கினி ஜ்வாலை போல் பிரகாசிக்கும். மத
போதனை பால் மதச்சண்டை பெருகுமென்று பிதற்றுவதெ
ல்லாம் வீண் விதண்டாவாதமே. நம் நாட்டின் சரித்திரத்
தை உற்று நோக்குவார்க்கு மதச்சண்டைகள் மற்ற நாடு
களை விட நம் நாட்டில் மிகக் குறைவாகவே யுள்ளன வென்
பது தெளிவாகும். உலகில் நெடுநாளாக ஒருவருக்கொருவர்
சகோதர பாவத்துடன் ஒற்றுவாழ்ந்து வருபவர் நாமே.
அடைக்கலம் புகுந்த பிற மதத்தார்க்கு இனிது வாழ்வத
ற்கு இடமும் சௌகரியமுங் கொடுத்தவர் நாமே பிறமதத்
தினர் நம்மவரையும் தம்மதத்திற் சேர்த்துக்கொள்ள இடந்
தருபவரும் யாமே, பரமாத்மாவாகிய பகவானை அடைவ
தற்கு எல்லாமதங்களும் ஒவ்வோர் வழியைப்புகட்டுகின்றன
வென்றும், எல்லா மதங்களையும் அவ்வக்காலத்திற்கேற்ப
சிருஷ்டித்து, உலகம் மேன்மேலும் விருத்தியடையும்படி
அனுக்கிரகஞ் செய்து வரும் பரமாத்மா ஒருவனே என்றும்
அவனையே பல மதங்களும் பல நாமங்களால் அழைக்கின்
றன என்றும், நாம் திடமாக எண்ணுவதால், நாம் நீண்ட
காலமாக இங்கு வந்த எல்லா மதங்களையும் ஆதரித்து வரு
கின்றோம். நம் இந்து மதத்திலேயே எத்தனை பிரிவுகளி
ருக்கின்றன? அதனால் நாம் தினந்தோறும் ஒருவருக்கொரு
வர் சண்டை போட்டுக்கொண்டு மண்டைகளை உடைத்துக்
கொள்ளுகிறோமோ? நமது சண்டைகளெல்லாம் வாய்ச்
சண்டைகளே. நமது வெற்றியெல்லாம் வாத வெற்றிகளே.
நமது போர்க்களமெல்லாம் அவைக்களமே. நம் படைகளெல்
லாம நூல் படைகளே. உண்மை நெறிகளை நாடுவதற்காக
வே நம்மவர்க்குள் வாதம் நிகழும். நாம் மனமொழி மெய்
களால் பிழைபடுவது கிடையாது. இத்தகைய நமக்கு என்
னனம் கைமிஞ்சும்? தற்காலத்தில் இந்துக்களுக்கும் மகம
தியர்க்கும் விழாக்காலங்களில் நடக்கும் மதச்சண்டைகளை
யாரேனும் எடுத்துரைப்பாராயின், அவரே இச்சண்டை
கள் ஐதராபாத், காசுமீரம் முதலிய இந்திய உள் நாடுக
ளில் நிகழ்கின்றனவா என்பதையும், இதற்கு முன் இவ்

விதச் சண்டைகள் இந்தியாவிலுண்டா வென்பதையும், சற்று கவனிப்பார்களாக, இவை சென்ற 35 வருஷ காலத்திலே தான் ஏற்பட்டன. இப்போதுண்டாகும் இந்தியர் கிளர்ச்சியால் இருமதத்தினர்க்கும் ஒற்றுமை மறுபடியும் ஏற்பட்டுவருகின்றது. சமீபத்தில் ஜனங்களுக்குள் சம்பவித்த போட்டியும், அறியாமையும் நம் நாட்டின் மேம்பாட்டில் கருத்துவைக்காத கண்மூடிகளின் தூண்டுகோலுமே இச்சண்டைகட்குக் காரணம். தேசாபிமானம் எல்லா ஜாதியாருள்ளும் பரவினால் அச்சண்டைகள் பகலவன் முன்னின்ற பனிபோல் முற்றிலும் அற்றுவிடும். அதற்கு வேண்டிய அனுகூலங்கள் இப்போது ஏற்பட்டுள்ளன. விரைவில் எம்மதத்தினரும் தம்மை முதலில் இந்தியரெனப் பாவித்துப் பொது நன்மைக்குரிய விஷயங்களில் தம் புந்தியைச் செலுத்துவாராக. இதனால் நம் பள்ளிகளில் மதபோதனை கூடாதென்பது வீண் ஞானமில்லாக் கூற்றென விடுத்திடுக. இதை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளுக்கு பாஷாபிமானத்தையும் தேசாபிமானத்தையும் போதித்திடுக.

இனி தேகப்பயிற்சியைப்பற்றிச் சிறிது இங்குக் கூறுவது அவசியம். நமது குருகுல வாசத்தில் மாணவரின் தேகத்தைத் திடப்படுத்துவதற்கான வழிகள் பல விருந்தன. ஆசிரியர்க்கு எப்போதும் அவர் பணிவிடை செய்து வந்தனர். நல்ல காற்றையே உட்கொண்டனர். சுத்த ஜலத்தையே பருகிவந்தனர். அமித போஜனத்திற்கு இடந்தந்திலர். தேகசுத்தி மிகுதியாகக் கொண்டிருந்தனர். மனத்தூய்மை அவரிடம் நிரம்பியிருந்தது. சோலைகளிலும், காடுகளிலும், இஷ்டம் போலுலாவித்திரிந்து, இயற்கை அற்புதங்களையும், வனப்புக்களையும், கண்டு மகிழ்ந்து பகவானது அந்தர்யாமித்துவத்தை எளிதிலறிந்து உள்ளன்பு நிறைந்து என்புருகினர். இங்ஙனம் காலங்கழித்த நம்மாணவர் திடதேகங்கள் பெறுவது ஒரு வியப்பாமோ?

தற்காலமாணவரைப் பார்ப்போம். அவர் படிக்கும் பள்ளிக்கூடம் பெரும்பாலும் ஜன நெருக்கமான இடங்களில் கட்டப்பட்டுள்ளது. அதிக பாடங்களை அவர் தலையில்

சுமற்றிவருவதால் அவர் காலமெல்லாம் படிப்பதிலேயே கழிகின்றது. குழந்தைகள் துள்ளி விளையாடுவதற்கு பள்ளியை யடுத்து இடமே கிடையாது. ஆங்கில விளையாட்டுகள் சிலவற்றை இப்போது விரும்பி ஆடிவந்தாலும், அவைகளுக்கும் அநேக பள்ளிக்கூடங்களுக்கும் வெகுதூரம். ஏனெனில், முதலில் பெரிய காலி இடங்கள் வேண்டும். பட்டினங்களின் மத்தியில் அதிக பொருட்செலவின்றி இவை அகப்படுவது சாத்தியமாகாது. இரண்டாவது இவைகளை ஏற்படுத்துவதற்கும், அவை நடைபெறுவதற்கும், துண்டுமுதல் வேண்டும். பள்ளிக்கூடத்தை நடத்தும் பெரியோர் இவைகளை இனமாகவே பிள்ளைகள் அனுபவிக்க இடந்தருவாராயின், அது எல்லாருக்கும் அனுகூலமாகவிருக்கும். அவ்வித அனுகூலங்கள் வாய்ப்பினும் தற்கால ஆசிரியர்க்கும், பெற்றோர்க்கும், பிள்ளைகள் விளையாடுவது பேதைத்தனமாகின்றது. எப்படியாகிலும் பரீட்சையில் தேறவேண்டுமென்ற ஆசை பிள்ளைகளை ஒரு பக்கம் பிடரி பிடித்துத் தள்ளுகின்றது, இவர்களும் எங்கேயாவது தம் பிள்ளைகள் விளையாடுவதைக் கண்டால் மனஞ்சகியாது வெருட்டி யோட்டிவிடுகின்றனர். வாலிபத்தில் வளராத தேகம் பின்னர் வளராதென்பதை அவர் முற்றிலும் மறந்துபோவர். அவர்களைக் கடிந்து கூறுவானேன்? தாம் கற்றவாறுதானே தம் பிள்ளைகளும் கற்கவேண்டுமென அவர் எண்ணுவர். இவ்விதம் பலவாறு பிள்ளைகள் படும் துயர்க்குக் குறையில்லை. வாலிபப் பருவம் பிற நாட்டுச் சிறார்க்கு இன்பமாகக் கழிகின்றது. நம் சிறார்க்கோ அது பெரும்பாரமாகிக் கொடுந்துன்பங்களுக்கிடமாகின்றது. அவைகளை சகிக்கத்திறனற்று பிள்ளைகள் மெய் தளர்ந்து மனமுடைந்து வருந்துவர். அவர் ஆயுளும் குறைந்து கொண்டு வருகிறது. நமது படித்த மேதாவிகள் 40 வயதிற்கு மேலிருப்பது இப்போது அரிதாகின்றது. இதனால் நம் நாடு அடையும் அளவிறியா நஷ்டத்தைச் சற்று நினைமின். நம்மவருக்குச் சராசரி வயது 23½. ஆங்கிலர்க்கு 40-ம், நியூஸிலண்டு வாசிகட்கு

60 மாக விருப்பதற்குக் காரணத்தையும் கண்டு சொண்மின். இளம் பிராயத்திலேயே தேகவலி பெறுவதற்கிடங் கொடாமல் பிள்ளைகளை நாள் முழுதும் வருத்தினுல், அவர் எவ்விதம் திட புருஷராவர்? பாடசாலை யந்திர சாலையாக மாறிவிட்டது. மணிக்கு மணிவேறு பாடம், மணிக்கொரு உபாத்தியாயர். மூச்சு விடுவதற்கும் இடங்கிடையாது. மாலையில் யாதேனுமொரு சுட்டப் ஆரற்கும் பிள்ளைகள் படித்து வரவேண்டும். இரவெல்லாம் ஓயாத வாசிப்பு; விடிவதற்கு முன்பு எழுந்து படிக்கவேண்டுமென்ற பெற்ரோர் உபத்திரவம்; பொழுது விடிந்தால் வீட்டிற் செய்யவேண்டிய கணக்குகள், வாசிக்கவேண்டிய பாடங்கள்; எழுதவேண்டிய விஷயங்கள், சித்திரிக்கவேண்டிய படங்கள். இத்தனையும் போதாதென்று பிள்ளைகளைப் புத்தக சாலையினின்றும் புத்தகங்களை எடுத்துப் படிக்கத் தூண்டுதல். பணக்கார குழந்தைகளாயிருந்தால் வீட்டாசிரியர்களை அமர்த்தி அவர்க்குப் போதிப்பது. இவ்வளவு இம்சையினின்றும் தப்பி அவர்கள் வெளியேறுவதற்குள் நம்சிறுர்க்கு தினசரி பரீட்சை வாரப்பரீட்சை, மாதப்பரீட்சை, மும்மாதப் பரீட்சை, ஆறுமாதப்பரீட்சை, வருஷாந்தரப்பரீட்சை, ஒன்றின் பின் ஒன்ருகத் தொடர்ந்து வந்துவிடுகிறது. என்ன செய்வார்கள், பாவம்! பல பிள்ளைகள் பரீட்சைப் பேய்களைக் கண்டு வெருண்டு, மூளை வறண்டு போகின்றனர். ஒரு சிலரே இச்சித்திரவதையினின்றும் தப்பி உயிர் பிழைத்து முடிவு வரைத் தவருது தேறுகின்றனர். அவர்க்கு நீண்டவாயுள் உண்டா? ஒருபோதுங் கிடையாது. அரிதிற் கற்றுத் தேறியவர் அற்பாயசில் மடிவதை நாம் கண்ணுறக் காண்கினறேமன்றே? இது என்ன விபரீதம்! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல், வாசிக்கப் புகுந்து கைப்பொருளும் மெய்வலியுமிழந்து ஆயுளையும், குறைத்துக்கொள்வாருண்டோ? இத்தீய விளைவுகள் இன்னும் பெரும்பாலார்க்குத் தெரியவில்லை, அவர் அவைகளை அறியும் வரை நமது சுதேசக் கல்வி முன்னேருது பள்ளிப் பிள்ளைகளுக்கு இப்போது இருப்பது போல, பெரியோர்க்கும் ஒரு பாடசாலை ஏற்படுத்தி, அதில் அவர்களை 5மணி விடாதிருத்தி, ஒருவர் பின்

ஒருவராக ஐந்து ஆசிரியர் பிரசங்கத்தைக்கேட்கச் செய்து வீட்டிலும் அதேமாதிரி மீதிப்பொழுதைக்கழிக்கும்படி நியமித்து விளையாட விடாமல் மூச்சு விடுவதற்கும் அவகாசங்கொடாமல் சவட்டினால் ஒருவேளை சுயானுபோகத்தால் தெளிவடைந்து, நாம் நழுவவிட்ட சுதேசக் கல்வி முறையின் பெருமையை அவர் அறிவர். ஜீரணக்கருவிகள் சரியாக வேலை செய்யாமலிருக்கும் ஒருவனுக்குப் பல முறை உணவளித்து, அஜீரணத்தையும், தேக அசௌக்யத்தையும் விளைவிப்பது போல, நமது பள்ளிப்பிள்ளைகளுக்குப் பாடத்தின் மேல் பாடத்தை ஊட்டி அவைமனதில் பதிவதற்கும்பொழுது கொடாமல், அவர்களை நடைக்களஞ்சியங்களாகவும் உயிர்ப்பிணங்களாகவும் மாற்றிவருவதை அவ்விதம் தெளிவு பெற்றபோது தான் அப்பொய்யாரெல்லாருமுணர்வர். நாம் தலைமுறை தத்துவமாகக் கற்றுவந்த முறையில் இவ்வண்ணம் பல பாடங்களையும் ஒரே தடவையில் கற்பதென்பதுண்டோ? ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டால் அதிலேயே நம்முன்னோர் தம் முழு மனத்தையும் செலுத்தி அழுத்தமாகப் படித்துவந்தனர். படித்தவற்றைச் சிந்தனையால் தெளியச்செய்து தம்மனதில் பதித்து வந்தனர். பாடங் கேட்கும்போதைக் காட்டிலும், சிந்தனைப்போதே அதிகமாகவிருந்தது; இன்பமாகப் பொழுதுபோக்கவும் இடமிருந்தது. இப்போதோ சிந்தனைக்கு சாவகாசமில்லை. புஸ்தகங்களிலுள்ளவற்றை மனதிற் கொள்ளைகொண்டு, பரீட்சையில் முன்பின் பாராமல் துப்பிவிடுவதே தமக்குறு துணையாகுமெனக் கருதிப் பிள்ளைகள் பரபரப்பு மேலிட்டு படித்து வருவர். இதை முற்றிலும் மாற்றினாலன்றி நமது சிறுவர்கள் தேகவன்னம்பெறார். நீண்ட வாயுளும் அடையார்.

இதுகாறும் கூறியவைகளால் நமது சுதேசக் கல்வியின் சீரும் சிறப்பும் வெளியாகலாம். அதன் முக்கியாம்சங்களை இங்கு ஒருவாறு எடுத்துக்கூறினோம். நாட்டின் மேன்மைக்கும், செல்வ விர்த்திக்கும், நாட்டாரது பெருமைக்கும், அறிவு மேம்பாட்டிற்கும், சுகவாழ்விற்கும், காரணமா

காது, கேவலம் ஒருவனது இகலோக இன்பத்திற்கே சாதனமாக விருப்பின், அக்கல்விமுறை தள்ளத்தகுந்ததாகும். நமது புராதன முறையை அனுசரித்துக் கல்விகற்கும் மாணவரின் மேன்மைக் குணமும் மதிப்பும் எவ்வாறு இருக்கும் என்பதை நம் முன்னோரின் சிறப்பையறிந்துள்ள ஒவ்வொருவரும் அறிவர். இக்காலமும் அவ்வுத்தமமுறையை அனுசரித்துப் பிள்ளைகளுக்குப் போதித்தால், அவர் கல்வி அறிவு ஒழுக்கங்கள் நிரம்பி, யாவராலும் நன்கு மதிக்கப்படுவர். தம் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் மிக்க கீர்த்தியை விளைப்பர். பரோபகார சிந்தனை அவரிடம் குடிகொண்டிருக்கும். பிறர்க்கு எவ்வாறு பயன்படலாமென்பதை எண்ணியவண்ணமாய் காலங்கழிப்பர். தேசபக்தி அவரிடம் மலிந்துகிடக்கும். பிறருடன் போட்டிபோட்டு அவரை வஞ்சித்துப் பொருள் சம்பாதித்துத்தான் இன்புற்று வாழ வேண்டுமென்ற அவா அவரிடஞ் சிறிதுமிராது. உண்மையான மதப்பற்றுக்கொள்வர். பிறர் மதங்களை இழித்துரையார். தம்மதத்தை உயர்த்திக் கூறுர். தம்மனதையும் தேகத்தையும் வசப்படுத்திக்கொள்வர். நல்வழிகளிலேயே வேலை செய்வர். மனம் போனவாறு காரியங்களை நடத்தாமல் நன்மை தீமைகளை ஐயமறவுணர்ந்து அதன்பின்னே தொழில் புரிவர். பாஷாபிமானம் பெரிதும் பெற்று, தேசபாஷைகளில் தாம் கற்றவைகளை எழுதி, தேசகிரந்தங்களை விர்த்தி செய்வர்.

(தொடரும்,)

ஆர். ரெங்காச்சாரி,

எம். எ., எல். டி.,

பிரபத்தி வித்யை.

(380-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பிரபன்னன் மேற்கூறிய அனுகூலர்களிடத்தில் அன்பும், ஆதரவும் கூடினவனாக இருக்கவேண்டும் அவர்களை அனாதரவு செய்யலாகாது. அவர்களுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யங்களைச் செய்யவேண்டும். பணத்தாசை, காமம் இவைகளுக்கு பந்தப்பட்டு தன் கடமைகளில் உபேக்ஷயாயிருக்கக் கூடாது. ஈசுவர சங்கற்ப விரோதிகளான பிரதிகூலர்களிடத்தில் பிரபன்னன் சம்பர்க்கம் செய்யலாகாது. அனுபயர்களுடன் சேர்ந்தானாகில் அவன் ரத்னத்திற்கும், கல்லுக்கும், வித்தியாசமறியாத மூடனாகிறான். ஆகையால் பிரபன்னன் அனுகூலர்களைச் சேர்ந்து அவர்களுக்குப் பணிவிடை செய்யவேண்டும்.

பிரபன்னன் பிரகிருதியை பூர்ணமாய் ஜயிக்காததால் ஒருக்கால் பாபம் செய்ய நேரிடும். பாபத்திற்கு காரணம் விவேகமின்மை இது நிலையுள்ளது, இது நிலையற்றது, என்று அறிதல் தான் விவேகம். அதை அறியாதது அவிவேகம். அவிவேகத்தை வேறுடன் களையவேண்டுமானால் விவேகத்தைப் பெறவேண்டும்.

பிரபன்னன் ஒருவேளை அவிவேகத்தால் பாபகர்மத்தைச் செய்தாலும் உடனே பச்சாத்தாபத்தை யடைகிறான். அவன் வெட்கப்பட்டு இனி மறுபடியும் அக்கர்மத்தைச் செய்யாதபடி தற்காத்துக் கொள்ளுகிறான். மேலும் அவன் செய்த பாபச் செயல்களால் தீங்கடைந்தவர்களுக்கு இவன் பரிகாரம் செய்யும்படி இவனுக்கு கர்மதேவர்கள் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவார்கள். பிரபன்னன் ஈசுவரனுக்கு சகலத்தையும் பரித்தியாகம் செய்து ஸ்வய நலத்தைப் போக்கி, மனுஷ்யர்களுக்கு கைங்கரியம் செய்வதே ஜன்மமெடுத்ததற்கு முக்கியமான வேலையாக அறிகிறான்.

பிரபன்னன் வாசத்திற்கு யோக்கியமான இடம் எது என்றால், கலியுகத்தில் ஈசுவர சங்கற்பத்துக்கு அநுகூலர்களின் சங்கமே. அப்படி சங்கமானது கிடைக்காவிட்டால் ஐம்புலன்களையும் அடக்கி மனதையும் ஓடவிடாமல் நிறுத்தி, யோகம் செய்து கொண்டிருந்தால் அவன் இருக்கும் இடம் எல்லாம் குருக்ஷேத்திரம், புஷ்கர க்ஷேத்திரம், முதலிய புண்ய க்ஷேத்திரங்களாகும்.

பிரபத்தியென்பது ஸத்வாரகம், அத்வாரகம் என இரு வகைப்படும். பூர்வ ஜன்மாந்தரத்தில் நிவ்ருத்தி மார்க்கத்தில் பிரவேசிக்காதவனும், இந்த ஜன்மத்தில் முதல் முதலில் பிரபத்தி மார்க்கத்தின் மஹிமையை அறிந்தவனுக்கு ஏற்பட்டது ஸத்வாரகம் என்பது. பூர்வ ஜன்மங்களில் கர்ம ஞான, பக்தி யோகங்களை அப்பியாசம் செய்து பக்குவம் அடையாமலிருந்து யோகப்பிரஷ்டனாய் இந்த ஜன்மத்தில் பிறந்தவன் ஆத்மநிக்ஷேபம் செய்வதுதான் அத்வாரகப் பிரபத்தி

அவ்விருவகையில் ஒவ்வொன்றிலும் உக்தி நிஷ்டை ஆசாரிய நிஷ்டை, ஸ்வநிஷ்டையென மூன்று பிரிவுகள உண்டு. குருவானவர் சிஷ்யனுக்கு ஒரு ஸஹஸ்ய மந்திரத்தை உபதேசம் செய்ய அதனால் சீடன் முன ஜன்மங்களில் சம்பாதித்த ஞானங்களை அடைந்து, ஈசுவரனும் தானும் ஒன்று என்பதை அறிகிறான். இதுதான் உக்தி நிஷ்டை. ஆசாரியனிடத்தில் சீடன் தன்னை ஸமர்ப்பணம் செய்கிறான். ஆசாரியன் சீடனை தன்னுடைய பிரக்ஞையில் சேர்த்துக் கொண்டு, லோக குருவாகிய பரமாசார்யனுடைய சங்கம் பத்துடன் சீடனையும் சேர்த்து விடுகிறார். இது ஆசாரிய நிஷ்டை. திரிஜடையின் சரணாகதியும், விபீஷணனுடைய சரணாகதியும், இதற்கு திருஷ்டாந்தமாகும். திரிஜடை தன்னுடன் கூடவந்த ராக்ஷஸிகளையும் சேர்த்து சீதாபிராட்டியின் திருவடிகளில் ஸமர்ப்பணம் செய்தாள். விபீஷணன் தன்னையும் தன்னுடன் கூடவந்த நால்வரையும் ஸ்ரீ ராமனு

டைய திருவடிகளில் ஸமர்ப்பணம் செய்தான். ஒரு சிங்கமானது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குத் தாண்டும்போது, தன் சரீரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற ஈ முதலிய பூச்சிகளையும் கொண்டுபோகுமோ அம்மாதிரியே குருவும் தன்னுடன் தன்னுடைய ஆசிருத சிஷ்யர்களையும் ஸம்ஸாரத்தைத் தாண்டும்படி செய்கிறார்.

மத்தியில் ஒரு உதவியையும் அபேக்ஷிக்காமல் ஜீவன் ஈசுவரனை அடைதல் ஸ்வ நிஷ்டையாகும். இதுதான் முன்னர்க் கூறிய இருவித நிஷ்டைக்கும் மேலானது. தாமஸ் ஏ கேம்பிஸ் என்ற ஐரோப்பிய உத்தம ஞான சீலன் இவ்விதம் அருளிச் செய்திருக்கிறார் "சீடன் இயேசு என்கிற குருநாதனை நோக்கிச் செல்லும்போது இருவரும் நிர்வாணியாயிருக்கவேண்டும்." ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாலகிருஷ்ணனுகயிருக்கும்போது கோபஸ்திரீகளின் வஸ்திரங்களை அபகரித்துக் கொண்டு அவைகளை வாங்கவேண்டுமானல நிர்வாணமாய் வந்துதான் வாங்கிப்போகவேண்டுமென்று சொன்னதின் தாத்பரியமும் இதுவே. வெளிப்படையாகத் தோன்றும் கருத்தைத்தவிர ஸூக்ஷ்மார்த்தங்களைக் கவனிக்கவேண்டியதவசியம். ஜீவனுடைய பிரக்ஞையானது ஈசுவரப்பிரக்ஞையுடன் ஒன்றாகிக் கலந்தபோது மத்தியில் யாதொன்றும் இருக்கக்கூடாது. யாதேனும் ஒரு வஸ்து இருக்குமாகில் பூர்ணமான லயமாவது, ஆனந்தமாவது, உண்டாகாது. இதனல் ஸ்வநிஷ்டையில் தான் இதர நிஷ்டைகளில் காட்டிலும் பூரணமான ஆத்ம நிக்ஷேபம் உண்டு என்று ஏற்படுகிறது.

பிரபத்தி அல்லது "அட்—ஒன்—மெண்டு" என்ற உண்மையை சரியாகக் கொள்ளாமல் தவறுதலாகக் கொள்ளுகிறார்கள். சாதாரணமாக வழங்குகிற கிறிஸ்தவ மதத்தில் "வைகேரியஸ் அடோன்மெண்டு" என்று சொல்லப்படுகிற "பதில் பிரபத்தி" என்று ஒரு கொள்கையுளது. கிறிஸ்துவானவர் மனிதனை ஈசுவரனுடைய நிக்கிரஹ ரூபமான பெரும் கோபத்தினின்று தப்புவிப்பதற்காக, மனித

னுடைய பாபங்களை தான் ஏற்றுக்கொண்டு அந்த பாபி யின் ஸ்தானத்தில் இருக்கிறார் என்று அக்கொள்கை. கிறிஸ்துவை நம்புகிறேன் என்று சொன்ன மாத்திரத்தில், அவன் செய்திருக்கிற பாபங்களுடைய பலன்களை அவன் அனுபவிக்கவேண்டியதில்லையாம். உண்மையில் கிறிஸ்து செய்தது என்னவென்றால், மனிதர்களுடைய ஜீவஸ்வரூபத்தில் தன்னையும் சேர்த்துக்கொண்டு, ஜீவஸ்வரூபத்தையும் தன்னிடம் சேர்த்துக்கொண்டு தன்னுடை அளவற்ற கிருபையை அவர்கள் பேரில் பொழிகிறார் என்பதுதான்.

இதேமாதிரி ஹிந்து மதத்திலும் தப்பு அபிப்பிராயம் உண்டு. வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வடகலையாருள் சிலர் இவ்வித தப்பு அபிப்பிராயங்கள் கொண்டிருக்கின்றனர். ஒரு மனிதன் என்ன பாபம் செய்தாலும் சரி, பிரபத்திக்கு வேண்டிய ஒரு அங்கமும் அவனிடம் இல்லாதிருந்தாலும் சரி, அவன் ஒருகுருவை மாத்திரம் அண்டவேண்டியது. அவ்வாசாரியன் பிரபத்தி செய்தானேயாகில், அச்சிஷ்யனையும் கூட இழுத்துக்கொண்டு அவனையும் ஈசுவரனுடன் சேர்த்துவிடுகிறான். சிஷ்யனுக்கு ஒரு யோக்கியதையும் இல்லாவிடினும் பிரபத்திக்கு வேண்டிய ஒரு அங்கமும் இல்லாவிடினும், கொடிய பாதகங்களைச் செய்திருந்தாலும், சிஷ்யனை காப்பாற்ற குருவுக்கு வல்லமையுண்டு என்பது தான். இது ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை.

பிரத்யக்ஷானுபவத்தில் நடப்பதைப் பார்ப்போம். ஒருவன் மகாபாபியாயிருக்கிறான். சமீபத்தில் தான் மிருக சிருஷ்டியிலிருந்து மனுஷ்ய வர்க்கத்தில் பிறந்தவனாகயிருக்கிறான். ஸ்வல்ப புண்ய வசத்தால் அவன் "ஈசுவரன்" "குருநாதன்" "பிரபத்தி" "தீக்ஷை" என்கிற பதங்களை பிரயோகம் பண்ணுகிற குடும்பத்தில் பிறந்திருக்கிறான். இவ்வார்த்தைகள் காதில் விழ, இவ்விஷயங்கள் கொஞ்சம் மனதில் பதிந்தன. அவன் சொந்தக்காரர்களில் சிலருக்கு பிரபத்தி நடப்பதை பார்க்கிறான். அவன் பந்துக்கள், அவன் ஜாதி ஆசாரியன், இவர்கள் மற்றவர்களைப்போல் இவனையும் பிரபத்தி செய்து கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்துகிறார்

கள். அவனுக்கு பிரபத்தி செய்ய இஷ்டமுண்டோ இல்லையோ ஒருவரும் கவனிக்கிறதில்லை. சம்மதிக்காத பக்ஷத்தில் இவனை பரிகசித்து இவனை நாஸ்திகன் என்று தூஷிக்கிறார்கள். பரிகாசத்திற்கும் தூஷணைக்கும் பயந்து, பிரபத்தி செய்ய இணங்குகிறான். அவனுடைய குடும்பத்தின் குருவும், பந்துக்களும், ஒரு கோவிலுக்குள் அவனை அழைத்துச் சென்று கர்ப்பக்கிருகத்தின் கண்ணே நிறுத்திவைத்து குருவானவர் அவன் காதில் ஒரு மந்திரத்தை உபதேசித்து அவனுக்கு பந்த விமோசனம் ஆகவேண்டுமென்று பிரார்த்திக்கிறார். அப்போது யாவரும் சிஷ்யனைப்பார்த்து பாக்கியசாலி, லோகபாலகன், பிராக்ஞன், சீதோஷ்ணாதி இரட்டைகளை நிவர்த்தித்தவன் என்று புகழ்கிறார்கள். ஒருக்கால் அச்சிஷ்யன் பிராக்ஞனானாலும், ஆகலாம். ஆனால் சாதாரமாக யோசிக்குமளவில் இது ஒரு சடங்காக முடியுமேயொழிய வேறில்லை. அந்த சிடனுக்கு பிரபத்திக்கு வேண்டிய அங்கங்கள் ஒன்றுமிராது. உண்மையான பிரபத்தியுமாகாது.

மேற்கூறப்பட்ட உண்மைகளை பிரஹ்மக்ஞானத்தால் அறிந்தேன். இக்காலத்தில் சார்வாக மதமாகிற நாஸ்திகமதம் ஒருபுறமும், தத்வார்த்த மறியாத கட்டுப்பாட்டு சித்தாந்தங்கள் ஒருபுறமும் ஓங்கியிருக்க, பிரஹ்மக்ஞானமானது உலகெங்கும் தன் ஒளியைப்பரப்பி, புராதனமான உண்மைகளின் சித்த சுபாவத்தை யாவரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி செய்கிறது. அங்க பிரஹ்மக்ஞானமாகிற பிரஹ்ம வித்தைக்கு நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தைச் செலுத்துவோமாக.

ஓம் தத்ஸத்.

வி. கே. தேசிகாச்சாரி.

ஏழைகளும், ஏழைகளின் நிலைமையும்,

இப்போது இந்தியா மேல் நாடுகளுக்குச் சமமாக ஆக வேண்டுமென்றால், பல விஷயங்களில் அநேக சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். அவைகளில் ஏழைகளின் நிலைமையொன்று. தற்காலத்தில் இவர்களின் ஸ்திதி மிகவும் தாழ்மையாக இருக்கிறது. இந்த பதவியை விட்டு மேலுக்குக் கொண்டு வந்தால் தான் நாட்டிற்கு நலம். ஒரு தேசத்தில் பெரும்பான்மையோர் ஏழைகளாக இருந்தாலும், அல்லது நாளுக்கு நாள் அவர்களின் சங்கை அதிகரித்தாலும் அத்தேசத்திற்குக் குறைவேயன்றி நன்மையில்லை.

ஆனால் ஏழைத்தன்மையானது முற்றிலும் கெடுதல் அல்ல. சிலவிடத்தில் நன்மையையும் சிலவிடத்தில் தீமையையும் விளைவிக்கிறது. ஸ்காட்லாந்தும் ஸ்விட்லர்லாந்தும் மிகவும் மலைப் பிரதேசங்களாக இருப்பதால், அங்குள்ள ஜனங்கள் ஏழைகளாக இருந்தாலும், சுறுசுறுப்பும், பலமும் தைரியமும், உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் தீமையையுண்டுபண்ணுகிறது. பெரிய பட்டணங்களில் நெருங்கி அடைதலுக்கும் பேதி, ப்ளேக், மலேரியா, முதலிய வியாதிகளுக்கு ஜனங்கள் சீக்கிரமாக இரையாவதற்கும் காரணம் ஏழ்மைத்தனம்தான். இவைகளை நிறுத்தவேண்டியது மிக்க அவசியம். இங்கிலாந்திலோ ராஜாங்கத்தாரும் கோவிலைச்சார்ந்தவரும் பிரபுக்களும் இந்த விஷயத்தில் தலையெடுத்துக்கொண்டு வேலைசெய்கிறார்கள். அங்கே ஏழைகளின் ஸ்திதி ராஜாங்கத்தார் பிரவேசிக்கும்படி வந்துவிட்டது. விளையாட்டுப் பிரியம் விடுமுன் சிறு குழந்தைகள் கைத்தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். மனிதர்களும் ஸ்திரீகளும் யந்தரங்களுக்கு அடிமைகள். அவர்கள் குடியிருக்கும் இடங்களோ சாக்கடைகள் அடர்ந்ததாயும், நல்ல காற்று வீச இடமில்லாததாயும், ஜனங்கள் அடர்ந்த சிறு சிறைச் சாலைகளாம். இவ்விதத்தில் இருக்-

கும் ஏழைகளின் நிலைமையை மேன்மைப் படுத்த பார்லிமெண்டில் தொழிற் சாலைச் சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டன. இந்தியாவிலோ ஜனங்கள் இன்னும் அந்த ஸ்திதிக்கு வரவில்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில் வந்து விடுவார்கள் போலத் தோன்றுகிறது. ஒரு வேளை சாப்பிட்டால் மற்றொரு வேளைக்கு ஆகாரமில்லாதவர்கள் அநேகர் இருக்கிறார்கள். மேலும் நாளுக்கு நாள் விருத்தியாகிறார்கள். இதுவரையிலும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்தவிஷயத்தில் தலையெடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் இந்தூர் என்ற சுதேச சமஸ்தானத்தில் இப்பொழுது ஆளுகிற மஹாராஜா கொஞ்ச நாளுக்கு முன் இந்தூரில் இருக்கிற ஹோல்கார் கலாசாலையில் பிரபஸர் நாயக் என்பவரை ஏழைகளின் நிலைமையைச் சீர்திருத்த ஏற்பாடு செய்ய நியமித்து இருக்கிறார்.

மேல் நாட்டில் அநேக விதமாய் முயலுகிறார்கள். சிறு குழந்தைகளுக்கு விளையாடும் ஸ்தலங்களென்ன, கிழவர்களுக்கு உற்சாகம் கொடுக்க விநோதச் சாலைகளென்ன, சித்திர சாலைகளென்ன, இவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகள் பலபேருக்கு இன்பமும், நன்மையும், கொடுக்கிறதால் உபயோகமுள்ளவையாயிருந்தாலும், ஏழைகள் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள்.

அவர்கள் செட்டாயும் சுத்தமாயுமிருந்தால் அவர்கள் மேலான ஸ்திதிக்கு வரலாம் என்று சொல்லுவோர் சிலர். அவர்கள் குடியையும், ஆடம்பரமாய் கல்யாணங்களையும், சாவுகொண்டாடுவதையும், நிறுத்தலாம. அப்படியே நிறுத்தி தினந்தோறும் சோம்பலில்லாமல் வேலை செய்து மிச்சம் பிடிக்கிற கூலியாட்களும் வீட்டை சுத்தமாயும் குடுத்தனத்தை செட்டாகவும், செம்மையாகவும், நடத்துகிற அவர்கள் மனைவிகளையும் பார்த்ததில்லையா? ஆனால் இப்படியெல்லாம் இருக்கிறதாக வைத்துக்கொண்டாலும், இப்படி எந்த குடும்பம் இருக்கிறதோ அந்தக் குடும்பந்தான் முன்னுக்கு வரும். ஆனால் மற்ற குடும்பங்களின் வழியென்ன?

ஆகையால் ஏழைகள் செட்டாகவும், சுத்தமாகவும், மிதமாகவும், இருந்தால் மாத்திரம் போதாது.

இதற்கு இரண்டு வழிகள் கானன் பார்னட் (Canon Barnet) என்பவர் கூறுகிறார். ஏழைகள் தங்களுடைய ராஜாங்கத்தில் அதிக கவனம் செலுத்தலாம். அதில் கவனமில்லை யென்பது முனிசிபல் இலக்ஷனில் பரிசயமுள்ளவர்களுக்கு நன்றாகத்தெரியும். எவருக்கு அதிகவோட் கிடைத்தாலென்ன வென்றிருக்கும் அசட்டை கூடாது. ஜனங்கள் விஷயத்தில் அதிக கவனம் பாராட்டி ஏழைகளின் சௌகர்யத்தையும் நன்மையையுந் தேடும் பரோபகார மனிதர்களை இலக்ஷன் மூலமாக நியமிக்கலாம். அவர்களால் ஏழைகளின் நிலைமை சீராகலாம்.

மேலும், ஏழைகள் ஒன்று சேர்ந்தால் மேன்மைப்படலாம். உதாரணமாக, டச்சுக்காரர்கள் ஒன்று கூடி பாற்சாலைகள் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் தன்மை சிலரிடத்தில் தான் காணப்படுகிறது. இதைத் தவிர அஞ்ஞானமும் அவர்களுக்கு சத்துருவாக நிற்கிறது. புஸ்தக ஞானமும், மனித ஸ்வபாவ ஞானமும் இயற்கை யின்பத்தின் செயல்களும் அவர்களுக்கு எட்டாததாக இருக்கலாம். ஆனால் ஒருவர் மற்றவரோடு பழகி தங்கள் கூட்டுறவை விருத்தி செய்யலாம். அப்படிச் செய்ய சுயநயம்பாராட்டலும், மற்றவர்களிடத்தில் அவநம்பிக்கையும் குறுக்கே நிற்கின்றன. ஆனால் அவநம்பிக்கையும் சுயநலம் கருதும் தன்மையும் கல்வியானது நாட்டில் பரவினால் தாமாகவே போய்விடும். இப்போது அவர்களின் நன்மைக்காக ஏதாவது சொன்னால் அவர்களால் மனதில் வாங்க முடிகிறதில்லை. எந்த விஷயமாயிருந்தாலும் யுக்தியை உபயோகப்படுத்திப் பாடுபட்டால் தான் நன்மையை அடையலாம். அது கல்வியால் தான் சாத்யமாகும். ஆகையால் கல்வி விஷயத்தில் அஜாக்ரதையாக இருத்தல் கூடாது.

என். யக்ஞராமன்

பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)

அத்தியாயம் 28.

இயற்கையாய் அமைந்துள்ள லோகங்கள்.

நம்முடைய பூமியானது சூரியனைச் சுற்றியோடிக் கொண்டிருக்கிற ஒரு பெரிய கோளமென்று தெரிகிறது; அல்லது தெரிந்திருப்பதாக நினைக்கிறோம். இந்தப் பூமியையும் மற்ற கிரகங்களையும் அதததன் இடங்களில் நிறுத்திக் கொண்டிருக்கிற ஆகர்ஷண சக்திகளுக்கு அநேக விசேஷமான பேர்கள் உண்டு. ஆனால் இது நிஜந்தானவென்று நாமே பரிக்ஷை செய்து தெரிந்து கொண்டவர்கள் நம்மில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? உண்மையாகவே மிகவும் சொற்பமான பேர்கள் தான் என்றாலும் இந்தப் பூமியின் நகர்ச்சிகளையும், ஆகர்ஷண சக்திகளையும், அது நகரும் திக்கு முதலியவைகளையும், கொஞ்சமும் பிசகின்றி காட்டக்கூடிய அற்புதமான நுண்ணிய கருவிகளுண்டென்றும் அவைகளின் உதவியால் அவைகளைத் தெரிந்து கொண்டு உபயோகிக்க சக்தியுள்ளவன் எவனோ அவன் தனக்குத்தானே நிச்சயப் படுத்திக்கொள்ளலாமென்றும் நமக்குச் சொல்லுகிறார்கள்.

"சக்தியுள்ளவன் எவனோ அவன்" என்ற சொற்களின் விசேஷத்தைக் கவனியுங்கள் யாவரும் அதை ருசுப்படுத்திக் கொள்ள முடியாது. சக்தியுள்ளவன் தான் செய்ய முடியும் அந்தசக்தியைக் கொடுக்கிறவர் யார். அதை நாமெப்படி யடைகிறோம். ஆதியில் கடவுள் அச்சக்தியைக் கொடுத்து நாம்மிகவும்பிரயாசைப்பட்டால் அடையக்கூடிய இடத்தில் அதை வைத்தார். இப்போது அச்சக்தியை உடைத்தா யிருப்பவர்கள் அதற்காக மிகவும்பிரயாசைப்பட்டு உழைத்தவர்கள். அவர்கள் அவ் விஷயத்தைப்பற்றி சதாத்தியானம் செய்து அடிக்கடி பரிக்ஷித்துப் பார்த்து திடமுள்ள ஆலோசனைக்காரர்களாகவும் உறுதியாயும் பிசகின்றியும் வேலை செய்பவர்களாகவும் ஆனார்கள். அவ்விதமான பின் அவர்கள் ஒரு குறிப்பிட்ட

விஷயத்தில் தங்களுடைய பலமான புத்தியைச் செலுத்தி உறுதியாய் வேலை செய்து தாங்கள் அறியவேண்டியதைக் கண்டு பிடித்தார்கள். நாமும் அவ்விதமே செய்யவேண்டும்.

நம்முடைய பூமி இவ்விதமிருக்கிறதென்றும் அது இன்னவிதம் செய்கிறதென்றும், நாம் சொல்லுகிறோம். இவ்விஷயத்தில் இதர ஜனங்களால் சம்பாதிக்கப்பட்ட ஞானத்தை உபயோகித்துக் கொள்ளுவதில் நம்மில் அனேகர் திருப்தியடைகிறது மன்றியில் அது நாமே தேர்ந்து அறிந்த விஷயம்போல் பாவிக்கிறோம். நம்முடைய கவனத்தையும் எண்ணங்களின் சக்தியையும் இதர விஷயங்களில் செலுத்துகிறோம. அதாவது நமக்குச் சமீபத்திலுள்ளதும் நமக்கு அதிக முக்கியமென்று தோன்றுவதுமான விஷயங்களில் கவனம் செலுத்துகிறோம. ஏனெனில், பூமியானது சூரியனைச் சுற்றிப்போவதை நாம் தெரிந்துகொண்டாலும் தெரிந்துகொள்ளாவிட்டாலும் அது ஓடிக்கொண்டேயிருக்குமன்றோ?

இது நியாயமே. பிறருக்கு முக்கியமாய்த் தோன்றும் காரியம் நமக்கு முக்கியமில்லையெனத் தோன்றும். அப்படியே நாம் முக்கியமெனக் கருதும் காரியம் பிறருக்கு முக்கியமில்லையெனத் தோன்றும். ஆகையால் செய்வது முக்கியமென நாம் எண்ணும் காரியத்தில் மற்றவர்கள் ஏன் அலக்ஷியமாயிருக்கிறார்களென்று அவர்களை முனியாமல் அவனவன் காரியத்தை அவனவன் இஷ்டப்படி செய்யவேண்டியதுதான் நியாயம். ஒரே விஷயத்தை ஜனங்கள் பலவிதமாய் பார்க்கிறார்களென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் எல்லா விஷயங்களும் சரியாய் நடைபெறுவதற்காக ஈசுவரனுடைய சங்கற்பம் அவ்விதமேயிருக்கிறது.

ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் ஒரே ஜீவகாலத்தில் ஒருவன் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள முடியாது. ஆகையால்

ஒவ்வொருவனும் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்கொள்ளுகிறான். பற்பல விஷயங்களை பற்பலர் எடுத்தால் தான் நலம். ஒவ்வொருவனும் ஒரே விஷயத்தை ஒரே காலத்தில் கற்றுக்கொள்ள விரும்பினால் அது தவிர மற்ற விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

எவன் எந்த வேலைக்குத் தகுதியோ அவனதைச் செய்யக் கடவன். மற்ற வேலைகளைச் செய்ய அவன் தகுதியாகிற வரையில் அவைகளில் தேர்ச்சியடைந்தவர்கள் பிரயாசையின் பேரில் கண்டுபிடித்த உண்மைகளை சரியானதென்று வைத்துககொண்டு ஒழுகவேண்டியது.

ஒரே விஷயத்தில் அதிக புத்தியைச் செலுத்தி அதில் பக்குவமடைந்தவர்களுக்கு நிபுணர்களென்று பேர். அப்பேர்பட்ட நிபுணர்கள் பிரஹ்மக்ஞான சங்கத்தில் அனேகர் உளர். முதலில் பிளாவட்ஸ்கியம்மாளும், கர்னல் ஆல்காட் என்பவரும், தற்காலத்தில் பெசண்டு அம்மாளும், லெட்பீடர், மீட், என்பவர்களும் இன்னும் சிலரும் விசேஷதேர்ச்சியடைந்தவர்கள். அவர்களுடைய வேலை ஆத்ம வித்தையைப்பற்றியபடிப்பாம். அதாவது ஆத்மா என்பது என்ன? அது எங்கிருந்து வருகின்றது? அது தரிக்கும் சரீரங்கள் எவை? அது வசிக்கும் லோகங்கள் யாவை? அந்த லோகங்களை விட்டபின் அது எங்கே போகின்றது? இவை போன்ற விஷயங்களை அந்நிபுணர்கள் கண்டுபிடித்து நாம் படிக்கும் புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆத்மா கடவுளிடமிருந்து வருகிறதென்றும் அது அவருடைய அம்சமென்றும் நாம் அறிகிறோம். ஒரு ஜீவகாலத்தில் அது நான்கு சரீரங்களை தரித்துக்கொள்ளுகிறதென்றும் ஒவ்வொரு சரீரமும் அதற்கு சம்பந்தப்பட்ட லோகத்தின் திரவியத்தால் அமைக்கப்பட்டுள்ளதென்றும் நமக்குத் தெரிகிறது.

நம்முடைய சரீரங்களைப் பற்றிப் பேசும்போது மனிதனுடைய சரீர அமைப்பைப்பற்றி நாம் சொல்லுகிறோம். லோகங்களைப்பற்றிப் பேசும்போது நம்முடைய பூமி அல்லது கிரகத்தின் அமைப்பைப்பற்றிச் சொல்லுகிறோம்.

நமக்கு ஏழு சரீரங்களிருப்பது போல நம்முடைய பூமிக்கும் ஏழு பெரிய சரீரங்களிருக்கின்றன. ஆனால் நம்முடைய ஏழு சரீரங்களில் மூன்றைப் பற்றி மாத்திரம் நாமிப்போது தெரிந்து கொண்டிருக்கிறோம். பூமியின் ஏழு சரீரங்கள் அல்லது லோகங்கள் நம்முடைய சரீரங்களைப் போலவே ஒன்றையொன்று ஊடுருவிக்கொண்டிருக்கின்றன. அதாவது ஒன்றோடொன்று ஓதப்புரோதமாய்க் கலந்துகொண்டு பார்வைக்கு ஒரே சரீரம் அல்லது கோளகமாய்த் தோன்றுகிறது. எப்படி ஆகாசமானது காற்றையும் காற்றானது தண்ணீரையும் தண்ணீரானது பூமியையும் ஊடுருவிக்கொண்டிருக்கிறதோ அப்படியே நுண்ணிய லோகங்கள் திண்ணிய லோகங்களை ஊடுருவிக்கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு விதமான அல்லது அந்தஸ்துள்ள திரவியமானது அதனதன் நுட்பம் அல்லது பருப்படிக்குத்தக்கபடி பேரிடப்பட்டிருக்கிறது. பொதுவாய் லோகமென்று சொல்லப்படுகிறது. முதல் இரண்டு லோகங்கள் மகா நேர்த்தியானவைகளும் உயர்ந்தவைகளுமாம். அவைகள் ஆத்மிக லோகங்கள் மூன்றாவது நிர்வாணலோகம். நான்காவது புத்தி அல்லது விக்ஞானலோகம். ஐந்தாவது மானச அல்லது சுவர்க்கலோகம். ஆறாவது புவர்லோகம். ஏழாவது அதாவது மிகவும் கீழானதும் பரும்படியானதுமான லோகம் பூலோகமாம். பூலோகத்தைத்தான் நாம் அதிகமாய் அறிவோம். அனேகர்களுக்கு இது ஒன்றுதான் லோகமென்று எண்ணம். அவர்களிடம் வேறு லோகங்களிருப்பதாகச் சொன்னால் அவர்கள் சிரிப்பார்கள். அல்லது கோபப்படுவார்கள். அவ்விதம் நேர்ந்தால் அதைப்பற்றி அவர்களிடம் மேலே பிரஸ்தாபிக்கக்கூடாது. எந்தக்காலத்திலாவது ஒரு நாள் அவர்கள் இவ்விஷயத்தைப்பற்றி தாங்களே கற்றுக்கொண்டு அதன் உண்மையை பரிக்ஷித்துத் தெரிந்துகொள்ளுவார்கள்.

வி. வெங்குசாமி ஐயர்.

சிறுவர்க்கான பக்கம்

ஒரு கதை.

குழந்தைகள்:—தாத்தா, இன்றைக்கு ஒரு கதை சொல்லுங்கள் தாத்தா.

தாத்தா:—என்னமாதிரிக் கதை வேணும்?

குழந்.—ஏதாவது நல்ல கதை சொல்லுங்கள் தாத்தா.

மீனாக்ஷி:—அன்றைக்குச் சொன்ன கதை புத்தருடைய முன் ஜன்மங்களில் ஒன்றைப்பற்றியது. இன்றைக்கு நம் தேச சரித்திரத்திலிருந்து ஒன்று சொல்லுங்களேன்.

தா:—நல்லது கேளுங்கள். ஶிவாஜி மஹாராஜாவைத் தெரியுமா உங்களுக்கு?

மீ:—மஹாராஷ்டிர தேசத்தை ஒருங்குசேர்த்து மொகலாய அரசர்களைக்கூட எதிர்த்து பிற்பாடு சத்திரபதி மஹாராஜாவாய் ஆண்டுவந்த வீரனைத்தானே சொல்லுகிறீர்கள்;

தா:—ஆம்.

வேங்:—பள்ளிக்கூடத்தில் ஒரு படம் இருக்கிறது. வளைந்த மூக்கும் கூர்மையானபார்வையும் கொண்டு மிகவும் சுறுசுறுப்புள்ள குதிரைமேல் சவாரிசெய்து கொண்டிருக்கிற வீரர்தானே! எனக்கு நன்றாய் தெரியும். அவர் என்ன தாத்தா பேசுகிறதுபோலத் தோன்றுகிறது. படம் அவ்வளவு நன்றாய் எழுதி இருக்கிறது.

சுந்தரம்:—அந்தப்படம் எழுதியது யார் தாத்தா.

மீ:—ரவிவர்மாதானே தாத்தா.

தா:—ஆமாம். அந்த ஶிவாஜி உங்களைப்போல் குழந்தையாக இருந்தபோது அவருடைய தகப்பனாருடன்கூட இருக்கவில்லை. அவர் தகப்பனாரோ ஒரு யுத்தவீரன. தன் பெண்ஜாதியையும் குழந்தையையும் புண்யநகரம் என்ற புனா நகரத்தில் வைத்துவிட்டு பற்பல அரசர்களிடம் வேலையாயிருந்தார். ஶிவாஜியின் தாயார் பெயர் ஜிஜாபாய். அவள் மிகவும் புத்திசாலி, ஶிவாஜிக்கு ஸ்ரீராமர் கதையையும் இன்னும் பல புராண இதிகாஸக்கதைகளையும், சொல்

ஸி, ஸிவாஜியின் மனத்தில் உற்சாகத்தையும் தேவபக்தியை யும் உண்டுபண்ணினள். ஸிவாஜி உலகத்தில் பெற்ற கீர்த் திக்கும் பெருமைக்கும் அந்த அம்மாள் தான் காரணம் என் று சொல்லலாம். ஆனால் அவ்வுத்தமியைப்பற்றி நான் இன் று சொல்லவரவில்லை. ஸிவாஜியின் தகப்பனருடைய 'ஜா கீரை' மேல்பார்த்துக்கொண்டு வந்த தாதாஜி கொண்டதே வர் என்ற பிராமணன் ஒருவர் இருந்தார். அவரைப்பற்றித் தான் இன்று சொல்லப்போகிறேன்.

மீ:—'ஜாகீர்' என்றால் என்ன தாத்தா?

தா:—முன் காலத்து அரசர்களுக்கு ஸைனியங்கள் எப்போதும் தயாராகவைத்துக்கொண்டு கூப்பிட்டபோது யுத்தத்துக்குப் போவதற்கு ஆயத்தமா யிருப்பதற்காக ஒரு வீரனுக்கு இனமாகக் கொடுத்த கிராமம். இந்த தாதா ஜி கொண்டதேவர் இந்த ஜாகீரை மேல்ப்பார்க்க ஏற்றுக் கொண்டபோது அது மிகவும் சீர்குலைந்து வரும்படிவராத ஸ்திதியிலிருந்தது. அதை நன்றாக சீர்பண்ணி நல்ல ஸ்தி திக்கு கொண்டுவந்தார். தன் யஜமானுக்காக நல்ல தோப்பு வைத்து மிகவும் உத்தமமான பழங்களைத்தரும் விருக்ஷ ஜாதிகளை உண்டுபண்ணி யிருந்தார். அவர் அந்த விருக்ஷங் களில் ஒன்றில் இனிமையான பழம் இருந்ததைப்பார்த்து ஞாபகமறதியாக ஆசையால் யஜமானுடைய அனுமதியன் னியில் அப்பழத்தைப் பறித்து தின்றுவிட்டார். அப்பால் தான் செய்தது தவறு என்று உணர்ந்த உடன் தன் தவறு தலுக்காக மிகவும் தன்னை நொந்துகொண்டு அருகிலிருந்த வர்களை தன் கையை வெட்டிவிடும்படி ஆக்ஞாபித்தார் ஏன் என்றால் அக்கிரமமான காரியத்தைச்செய்த கையை வெட்டிவிட வேண்டுமென்பது அவர் கருத்து. ஆனால் அவர்கள் எல்லாம் மன்றாடிக் கேட்டுக்கொண்டபடி, கை யை வெட்டாமல நிறுத்தினர். இருந்தபோதிலும் கைக்குத் தண்டனை விதிப்பதற்காக அதற்குப் பிறகு அவர் தரிக்கும் உடுப்பின் வலக்கையை வெட்டிவிட்டு அவ்வலக்கையை மூடாமலிருப்பதையே அக்கைக்கு தண்டனையாக பாவித் துவந்தார். அப்பால் அவருடைய யஜமானர் ஷாஜிபான்ஸ்

லே அப்படி யிருக்கக் கூடாதென்று சொல்லி முன் வழக்கம்போல் முழுக்கையையும் மறைத்து சட்டை தரிக்கும்படி ஆக்ஞாபித்த பிறகுதான் அப்படிச் செய்தாராம். இது அல்லவா உண்மையான யோக்கியதை! இவ்வளவு கண்டிப்பாக தன்னையே பாதுகாத்தவர் மற்றவர்கள் திருடாமலும், கெடுதிசெய்யாமலும் எவ்வளவு கவனமாக கிராமத்தை பார்த்து வந்திருக்கவேணும். இவ்வளவு யோக்கியரால் பால்யத்தில் வளர்க்கப்பட்டுவந்ததே ஶிவாஜியின் பாக்கியம் என்று செல்லவேணும்.

மீ:—யோக்கியன் என்றால் இதுபோல் அல்லவா இருக்கவேண்டும் இக்காலத்தில் ஒரு கிராமத்தை பார்த்துக்கொள்ளச் சொன்னால் கிராமத்தையே கொஞ்ச காலத்துக்குள் விழுங்கி விடுவார்கள் போலிருக்கிறதே. அந்த வேலைக்காரர்களுக்கும் இந்த உத்தமருக்கும் எட்டு எணி வைத்துப் பார்த்தாலும் எட்டாதுபோலிருக்கிறதே. வேலியே பயிரைத்தின்பதுபோ லிருக்கிறது இவர்கள் செய்கை. ஆனால் தாதாஜி கொண்டதேவர் மாதிரி உண்மையானவர்கள் இப்போதும் இருக்கிறார்களா, தாத்தா?

தா:—இருப்பார்கள் இல்லையென்று சொல்லமுடியுமா? ஆனால் இந்த காலத்தில் சீக்கிரம் பணக்காரனாய் விட வேண்டுமென்ற ஆசை மேலிட்டால் அம்மாதிரியான மனிதர்களைக் காண்பது அரிதுஆகிறது. அப்படி ஒருத்தர் இருவர் அகப்பட்டாலும் அவர்களை உலகம் பரிசுகிக்கும். பழய நாட்களில் போல யோக்கியதைக்கு மரியாதை அதிகமாயும் பணத்திற்கு மரியாதை மட்டாகவும் யாவரும் கொடுத்தால், சிலாக்கியமாயிருக்கும்.

சுந்:—ஆமாம் தாத்தா. எங்கள் பள்ளிக்கூடத்தில் கற்பிக்கும் புஸ்தகங்களில ஜார்ஜ் வாஷிங்டன் கதைதான் போட்டிருக்கிறது. இந்தக்கதையைக் காணோமே தாத்தா. அது ஏன்?

தா:—பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும் புத்தகங்களை எழுதுகிறவர்களும் அப்புஸ்தகங்களை பள்ளிக்கூடங்களில்

ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவு அளிக்கும் அதிகாரிகளுக்கும் நம் தேச சரித்திரம் தெரிகிறதில்லை. ஆகையால் இங்கிலீஷ் புஸ்தகங்களில் எழுதியிருக்கிற கதைகளைத் தமிழ்ப்படுத்தி அச்சிடுகிறார்கள்.

வே:—ஆனால் நம்முடைய சரித்திரங்களில்கூட இன்னும் இந்தமாதிரி நல்ல கதைகள் இருக்காதா தாத்தா?

தா:—எத்தனையோ இருக்கின்றன.

குழந்.—அப்படியானால் இன்னும் ஒரு கதை சொல்லுங்களேன்.

தா:—ஆகட்டும். ஆனால் இன்று நாழிகையாய்விட்டது. இன்னொருநாள் பார்த்துக்கொள்வோம்.

சோமசன்மா.

புத்தக விமர்சம்

கம்பராமாயணம். (சுருக்கம்.) பாலகாண்டம்:—ஸ்ரீமான் வ. வெ. ஸு. அய்யர் எழுதிய முகவுரை, அரும்பொருள் விளக்கம் அருஞ்சொல் அகராதியுடன் கூடியது. விலை காகித அட்டை ரூ 2. துணிக்கட்டடம் ரூ 2—6. கம்பன் படத்துடன் கூடியது.

தமிழுலகம்போற்றும் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பனுடைய இராமாவதாரமென்ற இராமாயணத்தை இதுகாறும்தமிழ்வித்வான்களே கற்று பிறருக்கு உணர்த்தி அதனுள்ளடங்கியிருக்கும் இன்பத்தை பாமரர் அனுபவிக்கும்படி செய்யவேண்டியிருந்தது. கம்பன் உபயோகப்படுத்தியிருக்கும் அரும் பதங்களின் பொருளை அறியாதபடி தவிப்பதோடு சொற்றொடரைப் பிரிக்கத்தெரியாது கம்பராமாயணத்தைப் படிக்க முடியாமல் பரிதவிப்போர் பலருண்டு. முற்றும் கற்ற பண்டிதர்களைத் தவிர கம்பராமாயணத்தை படிக்க வேண்டுமென்ற ஆவலுடையவர்கள் எத்தனை பேர்களிருக்கின்றனர்? அவர்கள் எல்லாம் ஸ்ரீமான் வ. வெ. ஸு அய்யர் இப்பதிப்பை வெளிப்படுத்தியிருப்பதற்கு அவருக்கு மிகவும் நன்றி பாராட்டற்பாலர். இப்பதிப்பினை வெளியிட அய்யரவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறார். பதங்களைத் தக்கவாறு பிரித்து அச்

சிட்டிருப்பதுடன், எளிதில் பொருள் புலனாகும்படி சொல் தொகைகளுக்கு இடையே அதிகமாகவும் கொஞ்சமாகவும் இடைவெளி யிட்டுள்ளார். ஆங்கிலப் புத்தகங்களில் போல முற்றுக்குறி, வாட்குறி முதலிய அடையாளங்கள் இட்டிருப்பது அன்வயப்படுத்த மிகவும் உபயோகமாயிருக்கின்றது. அரும்பொருள் விளக்கத்தை துண்டாக ஒரு பகுதியில் அச்சிட்டிருப்பது பொருத்தம் என்று எண்ணுகிறோம் ஏன் எனில், ஒவ்வொரு செய்யுளின் அடியில் அவ்வாறு அச்சிட்டிருந்தால் செய்யுளைப் படிப்போர் அதன் பொருள் என்னவென்று சிந்தனை செய்யாமலே ஆசிரியருரையைப் பார்க்கநேரிடுகிறது. ஆனால் இப்புத்தகத்தைப் படிப்போர் தாமாகவே சிறிது சிந்தனைசெய்து பொருட்படாவிட்டால் விளக்கத்தைப் பார்க்கும்படியாகிறது. அரும் சொல் அகராதியில் வேண்டியமட்டும் அருமைப் பொருள்களியாவற்றிற்கும் பொருள்கொடுத்திருக்கின்றனர்

சிலர் இம்மாதிரி பதம் பிரித்து அச்சிட்டிருப்பதால் செய்யுள்களை ஏற்றவாறு சந்தத்துடன் வாசிக்க முடியாமல் போய்விடும் என்று இம்முறையைக் கண்டிக்கின்றனர். ஆனால் சாதாரணமாய் செய்யுளல்லாத வசன நடைகளைப் படிக்கும்போதும் இயற்கையாகவே நாவானது பதங்களைத் தக்கவாறு சேர்த்தே வாசிக்கின்றது. சந்தத்தை அறிவது செவியின் சுபாவம். அதற்கேற்ப நாவும் சந்திகளைத் தக்கவாறு சேர்த்துக்கொள்ளும். ஆகையால் இது இழுக்காகாது.

ஸ்ரீ வ. வெ. ஸு. அய்யர் எழுதியுள்ள முகவுரையும், அதற்கு முன் தொகுத்துள்ள ஹை கோர்ட்டு ஜட்ஜு ஸ்ரீமான் தி. வெ. சேஷகிரி அய்யர் அவர்களின் ஆங்கில முன்னுரையும் தமிழ் முன்னுரையும் கம்பனுடைய வாக்கின் சிறப்பையும் காம்பீரியத்தையும் யாவரும் அறியும்படி விளக்கிக்காட்டுகின்றன- வால்மீகி, கம்பன், இருவர்களுடைய நடைகளையும் சிறப்பையும் சீர்தூக்கி ஒத்துப் பார்த்து அவைகளின் தாரதம்மியங்களை ஆசிரியர் முகவுரையில் கூறியிருப்பது யாவரும் கவனிக்கத்தக்கது. கவியின் இரஸத்தை அனுபவிப்பதற்கு மிகவும் உபகாரமாக வுள்ளது.

மற்ற உரையாசிரியர்கள் செய்யும் உரையினின்று தம்முடைய அபிப்பிராயம் பின்னப்படும்போதெல்லாம் தம்முடைய அபிப்பிராயத்தை ஆதரிக்கக்கூறியுள்ள காரணங்கள் பொருத்தமாயிருக்கின்றன.

இப்பதிப்பை வெளியிட ஆசிரியர் பெரிதும் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார் அதை உத்தேசித்து இப்புத்தகத்தின் விலை

அதிகமென்று சொல்லக்கூடாதானாலும், தமிழ் மக்களனைவரும் கம்பனைப்படிக்குமாறு இவ்வித சிரமம் எடுத்துக்கொண்ட ஆசிரியர் இதன் விலையை கொஞ்சம் குறைத்தால் இப்போது இப்புத்தகத்தை விலைக்குவாங்கக் கூடியவர்களைக் காட்டிலும் இன்னும் அநேகர் இதனை வாங்கிப்படிப்பார்கள். அதனால் ஆசிரியரின் கருத்தும் நிறைவேறும். அடுத்து வெளிப்படுத்தப் போவதாகக்கூறும் அயோத்தியாகாண்டம் முதலிய மற்றபாகங்களையும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

சமாசாரம்

திருவாங்கூர்பிரஹ்மஜ்ஞான மாகாணக்கான்பரென்ஸ் ஆத்திங்கல் என்னுமூரில் நாளிது மார்ச்சுமாதம் 10-ஆம் தேதி கூடிற்று. அவ்வமையம் சகோ. மஞ்சேரி எம். பாலகிருஷ்ணையர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். அவர்கள் வயதில் சிறியவராயினும் அறிவிலும் அமைதியிலும் மிகுந்து யாவருடைய நன் மதிப்பையும் கவர்ந்தார்கள். மொத்தத்தில் 12-வியாசங்களும் பிரசங்கங்களும் நிகழ்ந்தன. அவைகளில் பெரும்பான்மை தாய்பாஷையில். "வர்ணாசிரம தர்மமும் பிரஹ்மஜ்ஞானமும்" என்ற விஷயத்தைப் பற்றி சகோ. எஸ். கல்யாணராமையரும், "இந்திய தேசீயக் கல்வி என்னும் விஷயத்தைப்பற்றி ஆலப்பிழை சநாதன தர்ம வித்தியாசாலையைச் சேர்ந்த சகோ எஸ். ராமசுவாமி அய்யரும் பக்தியைப்பற்றி சகோ. கே. மாதவன் பிள்ளையும் குருதேவரின் ஆவசியகத்தைப்பற்றி சகோ. கே. எஸ் நாராயணையரும், உபன்யாசங்கள் செய்தார்கள். உதயதிசை நக்ஷத்திர சங்கக்கான்பரன்ஸும் அதேசமையத்தில நடை. பெற்றது. அடையாற்றிலிருந்து மிஸ். எ. இ. பெல் என்ற மாது தலைமை பூண்டார். அவர் திருவனந்தபுரம் சென்று அங்கு மார்ச்சுமீ ஸ்திரீகளுக்கு என்று ஒரு உபன்யாசம் செய்வார். அனந்தபுரம் திருவெட்டாருக்குப்போகிறார். திருவெட்டார் நக்ஷத்திர சங்கத்தலைவர் சகோ. கே. ராஜகோபாலையர் வாசனை ஊதுவத்திகள் தயார்செய்து அவைகளை விற்று அதன் வரும்படியை தேசியக்கல்வி பண்டுக்குக்கொடுக்க உத்தேசித்திருக்கிறார். இரண்டு வாலியர்கள், ஜகத் குருவைப் பற்றி உபந்யாசம் செய்தார்கள். அவர்களில் ஒருவன். சகோ. எஸ். கல்யாணராமையர் குமாரன் 8-வயதுப்பையன். அவன் பேசியது சபையாருக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது சகோ இ. வி. நாராயணையர் வெகு அழகாக இனிய தமிழில் ஹரிகதை செய்தார்.

சர்வதேன் விஷ சஞ்சீவி

"கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!"
"விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!"
குணமில்லாவிட்டால் ரூ. 100 இனும் கொடுக்கப்படும்.

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு வினைமுறை நேரிடுவதைப் பற்றி, நாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேன் விஷ சஞ்சீவியைத் தேள்கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ் விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, கண்டெத்தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேன் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், மனிதனை இரவில் 12மணிக்கு நித்திரையில் விஷம் தீண்டி விட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட்டு அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகிக்கும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை பாக்கட் 1-க்கு 0—8—0
டசன் 1-க்கு 5—0—0

விலாசம்

வி. ஏ. எஸ். பாணி,

3. இருளப்பன்வீதி மதராஸ்

சந்திரப் பிரபா

தீவிரமான வெட்டை (வெள்ளை), மூத்திர நாளங்களில் எரிச்சல், இரத்தமின்மை, மூலம், நீர்ச்சுருக்கு, விரைவாதம், பிரஸவ சம்பந்தமான வியாதிகள், மாதவிடாய் சம்பந்தமான வியாதிகளும் இம்மருந்தால் குணமடைகின்றன. மருந்தை உபயோகிக்கும்போதே குணத்தை அறியலாம். எவ்வித பத்தியமுமில்லை 16 மாத்திரை கொண்ட டப்பி 1க்கு ரூ I.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,

45, மேலக்கோபுர வீதி, மதுரை.